




# தினப்புயல்

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06







மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் -352



## ஹிசாலினியின் மரணத்தில் அரசியல் குளிர்காயும் அரசு – நடப்பது என்ன?



## விடுதலைப்புலிகள் பயங்கரவாதிகள் அல்ல புரட்சியாளர்களே – சி.வி.விக்னேஸ்வரன்




## மாறி மாறி ஆட்சிக்குவரும் அரசுகளும், தொடரும் அதிபர் ஆசிரியர்களின் போராட்டங்களும்

# சிறுமி ஹிசாலினியின் மரணத்தில் குளிர்காயும் அரசு - முஸ்லீம் தலைவர்களை பழிவாங்குகிறதா?



கொரோனா வைரஸ் தொற்று காரணமாக நாடு முடங்கிப்போய், பொருளாதார வீழ்ச்சியுடன் இலங்கை தடுமாறிக்கொண்டிருக்கும் இந்நிலையில், முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான றிசாட் பதியுதீன் அவர்களது கைது நாட்டின் பேசு பொருளாக தற்போது மாறியிருக்கிறது. இக் கைது நடவடிக்கையின் பின்னணியில் நேரடியாக அரசியல் பழிவாங்கல் தான் இருக்கிறது என்பது தெளிவாகப் புலனாகின்றது. ஒரு இனம் தாக்கப்படுகிறது என்பதற்காக நாம் சந்தோசமாக இருப்பதல்ல, எமது இலக்கு தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமைக்கு யார் இடையூறாக செயற்படுகிறார்களோ அவர்களை இனங்கண்டு எமது செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லவேண்டும். இக் கைது நடவடிக்கையின் மூலமாக அவரது அரசியல் வாழ்க்கையினை இல்லாதொழிக்கலாம் என்று நினைப்பது முட்டாள்த்தனமானது என்று தான் நாங்கள் நினைக்கிறோம்.

அவர் சிறைவாசம் இருக்க இருக்க அவருக்கு மக்கள் மத்தியில் ஆதரவு அதிகரிக்கும் என்பதுதான் உண்மை. கடந்த காலங்களில் மஹிந்த ராஜபக்ச அவர்களின் ஆட்சியில் முஸ்லீம் தலைவர்கள் செல்வாக்குமிக்கவர்களாக இருந்தார்கள். அதிலும் குறிப்பாக றிசாட் பதியுதீன் அவர்கள் வன்னியில் கொடிகட்டிப் பறந்த ஒருவர். மஹிந்த அவர்களுடன் மிக நெருக்கமாக இருந்தவர்களுள் றிசாட் பதியுதீன் அவர்களும் ஒருவர். இவர் ஊடாக வன்னிப் பகுதிகளில் பல வேலைத்திட்டங்களை மஹிந்த ராஜபக்ச அவர்கள் செயற்படுத்தினார்.

கடந்த நல்லாட்சியின் போது இடம்பெற்ற ஈஸ்டர் குண்டுத்தாக்குதலில் இவருக்கு தொடர்பு இருக்கின்றது என்ற கோணத்தில் தான் இவர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். இதனுடன் தான் படிப்படியாக இவர்களது செயற்பாடுகளை முடக்க அரசு தீர்மானித்துள்ளது. கடந்த காலங்களில் பல பள்ளிவாசல்கள் தாக்கியழிக்கப்பட்டது. உடைக்கப்பட்டது. இக் குண்டுத்தாக்குதலும் அரசு இன்று முஸ்லீம்களை பழிவாங்குவதற்கான காரணமாக இருக்கின்றது. கோட்டபாய அரசு முஸ்லீம்களை ஓரங்கட்டுவதற்கான திட்டம் இருக்குமாயின் முஸ்லீம்களில் நூற்றுக்கணக்கானவர்கள் இலங்கை அரசுடன் புலனாய்வு வேலைகளில் உள்ளனர் என்பதையும் நினைவிற் கொள்ளவேண்டும்.

இன்று நாட்டில் உர இறக்குமதிக்குத் தடை, வாகன இறுக்குமதிக்குத் தடை எனக் கூறி சீனாவிலிருந்து பொருட்களை கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துவருகின்றது. அரசு தமிழ் மக்களிடத்தில் எவ்வாறு கருணா பிள்ளையான் போன்றவர்களை தம்வசப்படுத்தி பிளவுகளை ஏற்படுத்தியதோ அதே போன்று முஸ்லீம் அரசியல்வாதிகளிடத்திலும் தற்போது செயற்பட்டு வருகின்றதை காணலாம். பிளவுகளை ஏற்படுத்தி தம்முடன் சில முஸ்லீம் அரசியல்வாதிகளை இணைத்துவைத்துக்கொண்டு முஸ்லீம் மக்களுக்கு எதிரான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றது. மேற்கத்தேய நாடுகளில் முஸ்லீம்களுக்கு நடக்கின்ற அநீதிகள், ஈரான், ஈராக் போன்ற நாடுகளில் வாழும் முஸ்லீம்களிடத்தில் வல்லரசு நாடுகள் பிரயோகிக்கின்ற அநீதிகள், பிளவுகள் போன்ற செயற்பாடுகளை இலங்கையிலும் விரிவுபடுத்தும் நோக்கில் தான் இன்று முஸ்லீம் மக்களுக்கு எதிரான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

பாராளுமன்ற உறுப்பினர் றிசாட் பதியுதீன் அவர்கள் இந்த அரசிற்கு ஆதரவளிக்காது போனதன் விளைவே இன்று கைதுசெய்யப்பட்டு பிணையில் கூட விடுதலை செய்யமுடியாத அளவிற்கு நிலைமை மோசமாகியுள்ளது. சிறையில் வாடும் அவரது மனைவி மற்றும் ஏனையவர்கள் சிறுமி ஹிசாலினியின் கொலைக்காக கைது செய்யப்பட்டுள்ளனர். இதற்கு றிசாட் அவர்கள் பொறுப்பானர்கள் எனக்கூறமுடியாது ஏனெனில் அவர் சிறையில் இருந்தவேளையில் தான் சிறுமி ஹிசாலினியினது கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. நீதியின் பக்கம் பார்த்தால் இக்கொலைச் சம்பவத்திற்கும் றிசாட் அவர்களுக்கும் சம்பந்தம் இருப்பதற்கான வாய்ப்புக்கள் குறைவு. சிறையிலிருந்த றிசாட் அவர்கள் வீட்டினருடன் தொடர்புகொண்டிருந்தாரா? என பல்வேறு கேள்விகள் எழுகின்றது.

பலர் இன்று இக்கொலைச் சம்பவத்தை அரசியலாக்க முயற்சிக்கின்றனர். இச்சிறுமிக்கு நீதி கிடைக்கவேண்டும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. இக்கொலையின் பின்னணியில் யாராவது சம்பந்தப்பட்டிருந்தால் பாரபட்சமின்றி உரிய தண்டனை வழங்கப்படவேண்டும். அதைவிடுத்து எழுந்தமானமாக சமூக வலைதளங்களில் பதிவுகளை செய்பவர்கள் தொடர்பில் தமிழ் பேசும் சமூகம் அவதானமாக இருக்கவேண்டும்.

பொலிசார் மற்றும் புலனாய்வுப் பிரிவினர் பல கோணங்களில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். இதற்காக ஒட்டுமொத்த முஸ்லீம் சமூகத்தையும் குற்றவாளிகளைப் போல பார்க்கக்கூடாது. இன்னமும் உண்மைச் சம்பவம் வெளியில் வரவில்லை. பாராளுமன்ற உறுப்பினர் றிசாட் பதியுதீன் அவர்கள் உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புபட்டிருந்தால் அல்லது பயங்கரவாதிகளுடன் தொடர்புகளைப் பேணியிருந்தால் காலத்தை வீணடிக்காமல் உரிய விசாரணைகளை மேற்கொண்டு நீதிமன்றத்திடம் உரியவர்களை ஒப்படைப்பதே சிறந்தது. இதுவரையில் உரிய ஆதாரங்கள் எதுவும் இல்லாமல் றிசாட் பதியுதீன் அவர்களை பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் ஊடாக கைதுசெய்து சிறையில் அடைத்துவைத்திருப்பது என்பது திட்டமிட்ட தனி நபர் மீதான பழிவாங்கல் என்பதை தெளிவாக கூறி நிற்கிறது.

இதேவேளை அன்று (05) பாராளுமன்றத்தில் உரையாற்றிய முன்னாள் அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான றிசாட் பதியுதீன் அவர்கள்,

"இன்று பேசுபொருளாக இருக்கின்ற முக்கியமான ஒரு விடயத்தை இந்த சபையில் பேச விரும்புகின்றேன். 102 நாட்களாக நான் தடுத்து வைக்கப்பட்டுள்ளேன். அவ்வாறான ஒரு நிலையிலேயே, எனது வீட்டிலே பணி புரிந்த சகோதரி ஹிஷாலினி தீப்பற்றி மரணித்த சம்பவம், என்னையும் எனது மனைவி உட்பட குடும்பத்தினரையும் வேதனைக்கு உட்படுத்தியுள்ளது.

எனது சகோதரி பைருசா பர்வின், 34 வயதிலே மரணித்த போது நாம் எவ்வாறு வேதனைப்பட்டமோ, அவ்வாறான வேதனை ஹிஷாலினியின் மரணத்தில் ஏற்பட்டுள்ளது. 16 வயதைப் பூர்த்தி அடைந்த பின்னர்தான், தரகர் ஊடாக எனது வீட்டில் பணிபுரிய ஹிஷாலினி அழைத்து வரப்பட்டார். அப்போது, அவரது தாயாரோ குடும்ப உறவினர்களோ அவருடன் வருகை தரவில்லை. அவர்கள் இங்கு வந்து வீட்டுச் சூழல் பற்றி பார்க்கவுமில்லை. ஒரு தனி நபர் வாழ்வதற்கான 7X6 அடி அளவிலான அறை ஒன்றும் அவருக்கு வழங்கப்பட்டதுடன், இணைந்த குளியலறை ஒன்றும் வழங்கப்பட்டு, பிரத்தியேகமாக வாழ்வதற்கான ஒழுங்கான கட்டமைப்புடனான அறைச் சூழல் ஒன்றும் அவருக்கு வழங்கப்பட்டது.

இந்த தீச்சம்பவம் கடந்த ஜூலை மாதம் 3 ஆம் திகதி 6.45 மணிக்கு இடம்பெற்றிருக்கின்றது. மாமனார் சிஹாப்தீனும் அவரது மனைவியும் உறங்கிக் கொண்டிருந்த வேளை, சகோதரி ஹிஷாலினியின் அழுகுரல் கேட்டு அவர்கள் ஓடி வந்த போது, அவரது உடலில் தீப்பற்றிக் கொண்டிருந்திருக்கின்றது. உடனே அங்கிருந்த காபட்டை எடுத்து, மனைவியின் 71 வயதுடைய மாமனாரும், 67 வயதுடைய அவரது மனைவியும் இணைந்து நெருப்பை அணைப்பதற்கு முழு முயற்சிகளை செய்துள்ளனர்.

'அருகே இருந்த நீர்த் தொட்டிக்குள் பாயுங்கள்' எனக் கூறி, ஹிஷாலினியை அதற்குள் இருக்கச் சொல்லி நெருப்பை அணைக்க பிரயத்தனம் செய்துள்ளனர். குடிப்பதற்கு குளிர்மையான நீர் கேட்ட போது அதனையும் கொடுத்துள்ளனர். இந்தத் தீயை அணைப்பதற்காக 10,15 நிமிடங்கள் சென்ற பின்னர், 1990 அம்பியூலன்ஸ் சேவைக்கு அழைப்பு எடுத்தனர். காலை 7.03 இற்கு இந்த அழைப்பு எடுக்கப்பட்டதாக தொலைபேசிப் பதிவுகள் உள்ளன. 7.33 இற்கு அம்பியூலன்ஸ் வண்டியில் கூட்டிச் சென்றுள்ளார்கள். வைத்தியசாலை அனுமதிப் பதிவில் இது உள்ளது. ஆனால், பொலிஸாரோ 8.35 இற்கு அவரை கொண்டு சென்றதாக நீதிமன்றத்தில் தெரிவித்ததாக நான் அறிகின்றேன். அதுமாத்திரமின்றி ஊடகங்கள் வேறு பொய்யான கருத்துக்களைப் பரப்புகின்றன.

என்னுடைய குடும்பத்திலோ அல்லது இரத்த உறவுகளுக்கோ இவ்வாறு ஒரு சம்பவம் நடந்தால் எவ்வாறு வேகமாக செயற்படுவோமோ, அதே போல அதிலிருந்து ஓர் அணுவும் குறையாமல் செயற்பட்டு அந்த யுவதியைக் காப்பாற்ற முழு முயற்சியையும் எனது மாமனாரும் மாமியும் செய்திருக்கின்றனர். அதன் பின்னர், எனது மனைவிக்கு இந்த விடயம் தெரியப்படுத்தப்பட்ட பின்னர் அவர் ஆஸ்பத்திரிக்கு ஓடிச் சென்றுள்ளார். அவரைக் காப்பாற்ற முழு முயற்சி எடுத்துள்ளார்.

மனைவி, பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினர் நோன்பு நோற்று பிரார்த்தித்துள்ளனர். அத்துடன் சம்பவம் நடந்த போது, தரகருடன் தொடர்பு கொண்டு 'தாயாரை வாகனம் ஒன்றில் கொழும்புக்கு வருவதற்கு ஒழுங்கு செய்யுங்கள். அதற்கான செலவைத் தருகின்றோம்' என எனது மனைவி சொல்லி இருக்கின்றார். ஹிஷாலினியை தினமும் வைத்தியசாலைக்குச் சென்று எனது மனைவி பார்த்திருக்கின்றார். அவரது உயிரை எவ்வாறாவது காப்பாற்றித் தாருங்கள் என மன்றாடி இருக்கின்றார்.

ஒரு கட்டத்திலே வைத்தியர்கள் 7-10 இலட்சம் வரை பிளாஸ்டிக் சத்திர சிகிச்சைக்காக தேவைப்படும் எனக் கூறி, அதற்கான தோலை சிங்கப்பூரில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டுமெனக் கூறிய போது, எனது மனைவி அதற்கான பணத்தை நான் தருகிறேன் எனக் கூறியிருக்கின்றார்.

இந்தச் சம்பவம் நடக்கும் போது நான் வீட்டில் இருக்கவில்லை. நான் இப்போது சிறையில் இருக்கின்றேன். இந்தச் சகோதரி வரும் போதும் நான் வீட்டில் இருக்கவில்லை. நான் மன்னாருக்கு பஸ்ஸிலே ஆட்களைக் கொண்டு சென்றதாக ஒரு பொய்யான வழக்கின் ஊடாக அப்போது சிறைப் பிடிக்கப்பட்டிருந்தேன். அப்போதுதான் இந்தச் சகோதரி எனது வீட்டுக்கு வேலைக்கு வந்திருக்கின்றார். தரகரிடம் வயது என்னவென்று கேட்ட போது, அவர் 17 என்று கூறியிருக்கிறார். தோற்றத்தில் இவர் 17,18 வயதைப் போன்று இருந்தார். ஆனால் இப்போது பிறப்புச் சான்றிதழில் 16 வயது என்று அறிய முடிகின்றது. இவர் நல்ல பண்பான பிள்ளையாக இருந்தார். நாம் உண்ணும் உணவையே இவருக்கு வழங்கி வந்தோம். எங்கள் பிள்ளை போல பராமரித்தோம்.

3 ஆம் திகதியிலிருந்து 15 ஆம் திகதி இறக்கும் வரையில் ஹிஷாலினியின் தாயார் மிகவும் அன்பாகவே எங்களுடன் நடந்து கொண்டார். ஊடகங்களுக்கும் சரியான அறிக்கைகளையே கொடுத்தார். ஆனால், ஹிஷாலினியின் மரணத்தின் பின்னர் அவரது கருத்துக்கள் மாற்றமாக இருந்தன. அரசியல் வங்குரோத்துக்காரர்களும், ஊடக விபசாரர்கள் சிலரும் இணைந்து அந்தத் தாயாரையும் குடும்பத்தினரையும் பிழையாக வழிநடத்தியுள்ளனர். நாங்கள் சாப்பாடு வழங்கவில்லை, நாய்க் கூண்டுக்குள் போட்டார்கள், எந்த வசதியும் இல்லையென அவர்கள் கூறத் தொடங்கினர். இவைகளை நினைத்து நான் மிகவும் வேதனை அடைகின்றேன். எனது மனைவி பண்பான ஒருவர். தனது பிள்ளையைப் போன்று ஏனைய பிள்ளைகளையும் நேசிப்பவர். அந்தத் தாயாரினதும் அவரது குடும்பத்தினரதும் வேதனையில் நாங்களும் பங்கு கொள்கின்றோம். ஆனால் அவர்களை சிலர் பிழையாக வழிநடத்துகின்றனர். குறிப்பாக சில ஊடகவியலாளர்கள் இந்தக் கைங்கரியத்தை செய்கின்றனர். சில பாராளுமன்ற உறுப்பினர்களது தொலைபேசிகளுக்கு இவர்கள் குறுஞ்செய்திகளை அனுப்பி போராட்டத்தை தூண்டும் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். எங்கள் வீட்டில் எந்தவிதமான அசிங்கமான வேலைகளும் இடம்பெறவில்லை என்பதை பொறுப்புடன் கூற விரும்புகின்றேன். ஆனால், சில ஊடக வியாபாரிகள் தினமும் தமது தலைப்புச் செய்திகளுக்காக இந்தக் குடும்பத்தை பிழையாக வழிநடத்தி வருகின்றனர் என்று தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**இரணியன்**

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல:154 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை,வவுனியா.

## பேரழிவைச் சந்திக்குமா இலங்கை!

கொரோனா என்கிற வைரஸ் தொற்றுப் பரவலினால் இலங்கை மாத்திரமல்ல உலக நாடுகளே பேரழிவினைச் சந்தித்து வருகின்ற நிலையில் இலங்கையும் தற்போது டெல்டா திரிபினை எதிர்நோக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை தோன்றியுள்ளது. கொரோனா வைரஸ் திரிபடைந்து இன்னும் பல மடங்கு வீரியத்துடன் வேகமாகப் பரவ உலகளவில் ஆரம்பித்துள்ளதுடன், இலங்கையிலும் அதனது தாக்கம் உணரப்பட்டு வருகின்றது.

முன்பிருந்ததை விட இலங்கையில் நாளாந்தம் தொற்றாளர்கள் மற்றும் மரணங்களின எண்ணிக்கைகள் அதிகரித்துள்ளன. நாளொன்றுக்கு சராசரியாக 100 பேர் மரணமடைந்துவருவதைபுள்ளிவிபரங்கள் காட்டுகின்றன.

அதேநேரம் நாட்டின் பல சிறப்பு வைத்தியர்கள் மற்றும் சுகாதாரப் பணியாளர்கள் நாட்டை தற்காலிகமாக முடக்குவதை தீவிரமாக பரிசீலிக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளனர்.

இலங்கை மருத்துவ கவுன்சில், அரசு மருத்துவ அதிகாரிகள் சங்கம், அரசு தாதிய அதிகாரிகள் சங்கம் மற்றும் வேறு சில தொழிற்சங்கங்கள் இந்த கோரிக்கையினை விடுத்துள்ளன.

இதற்கிடையில், நோய் பரவுவதைத் தடுக்க தவறினால், பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சைஅளிக்கும்வைத்தியசாலைகளின் திறனை பலவீனப்படுத்தும் விளைவை ஏற்படுத்தும் என்று சுகாதார அதிகாரிகள் எச்சரித்துள்ளனர். உடனடியாக நாட்டை முடக்கி ஊரடங்கு உத்திரவினை அமுல்படுத்துவதைத் தவிர வேறுவழியில்லை என்கிற அளவிற்கு இலங்கை அரசு உள்ளது. எனினும் நாட்டை முடக்குவது குறித்து நீண்ட பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருவதாகவும் அறிய முடிகிறது.

இந்த அசாதாரண சூழ்நிலையில் அதிபர் ஆசிரியர்களின் போராட்டங்கள் நாடு தழுவிய ரீதியில் நடைபெற்று வருகின்றன. உண்மையில் சம்பளப் பிரச்சினைகள் இருப்பதன் காரணமாக அரசு துரிதகதியில் அவர்களுக்கானத் தீர்வினை வழங்க இயலாமல் செய்வதறியாது மௌனமாகியுள்ளது.

மறுபக்கம் அத்தியாவசியப் பொருட்களுக்கான விலைகள் அதிகரிப்பானது மக்களை மேலும் மேலும் துன்பத்தில் ஆழ்த்தியுள்ளது. வேலைவாய்ப்பின்மையால் மக்களது பொருளாதாரம் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், எதிர்வரும் நாட்களில் நாட்டு மக்கள் பட்டினியால் மரணமடையும் நிலை தோன்றினாலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட கொவிட் ஒழிப்புசெயலணியினதுநடவடிக்கைகளில் திருப்தியில்லை என்கிற குற்றச்சாட்டு பரவலாக எழ ஆரம்பித்துள்ளன.

இதேவேளை மலையகப் பகுதிகளில் மரணித்த ஹிசாலினியின் நீதிக்கானப் போராட்டங்களும் வலுப்பெற்று வருகின்றன. இப்பெருந்தொற்று காலத்தில் போராட்டங்கள் மிகவும் ஆபத்தானது என்றாலும்நீதிகோரியபோராட்டங்களுக்கு அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளவேண்டும். ஒரு ஜனநாயக நாட்டில் ஆட்சியாளர்களின் கடமை அது.

# 155 உலக வரலாற்றில் குறுஞ்சமர்



1978 ஆம் ஆண்டின் ஏப்ரல் புரட்சி நடந்து ஒரு வருடத்தின் பின், 1979 ஏப்ரலில் ஆப்கானிஸ்தானின் சகல மாகாணங்களிலும் ஒரேநேரத்தில் கம்யூனிச ஆட்சிக்கு எதிராகக் கிளர்ச்சி ஆரம்பமானது. வெகு விரைவில் 90 ஆயிரம் அரசாங்க இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் நகரங்கள் மட்டுமே எஞ்சியிருந்தன. கிராமப் பகுதிகளில் குறிப்பாக இருவு நேரங்களில் கிளர்ச்சியாளர்களோ ஆதிக்கம் செலுத்தினர்.

மே மாதம் 1979ஆம் ஆண்டு கவிசுல்லா அமீன் பிரதம மந்திரியானான். ஆவன் கொடூரமாகக் கிளர்ச்சியை அடக்கத் தொடங்கினான். சுகல சிறைச்சாலைகளும் நிறைந்தன. அத்துடன் ஒவ்வொரு நாளும் மரணதண்டனையும் நிறைவேற்றப்பட்டது. ஆனால் அடக்குமுறைக்குப் பதிலடியாக, நாட்டின் சகல பாகங்களையும் சகல சமூகக்குழுக்களையும்உள்ளடக்கி, மக்கள் எதிர்ப்பு ,யக்கம் விரிவாகவும் ஆழமாகவும் வளர்ச்சியடைந்தது. ஆப்கானிஸ்தானில் நடைபெறும் சம்பவங்களைப்பற்றிமேற்கத்தேயர் யாரும் அப்பொழுது அக்கறை கொள்ளவில்லை.

ஏனெனில், மரபுப்படி இந்த நாடு சோவியத் ரசியாவின் புவிசார் அரசியல் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்தது. ஆனாலும் சோவியத் தலைமைப்பீடம் காபூலில் கம்யூனிச அரசாங்கம் விரைவில் கவிழப்போகும் ஆபத்தை எண்ணி மிகவும் கலவரமடைந்தது. இஸ்லாமிய அடிப்படைவாதிகளின் வெற்றியின் பயனாக, ஆசிய சோவியத் குடியரசுகளிலுள்ள (உஸ்பெகிஸ்தான், தஜிகிஸ்தான், துர்க்மெனிஸ்தான்) இஸ்லாமியர்கள் மத்தியில் கலவரம் ஏற்படலாம் எனச் சோவியத் தலைமைப்பீடம் அச்சமடைந்தது.

சோவியத் தலைமைப்பீடத்தின் முதலாவது வெளிப்பாடாக, ஆப்கானிஸ்தானுக்கு சில நூற்றுக்கணக்கான இராணுவ ஆலோசகர்களை அனுப்பியமை விளங்குகின்றது. அதேநேரத்தில், சோவியத் தலைமைப்பீடம் வெறுப்பிற்குரிய அமீனின் ஆட்களை அகற்றும்படியும் பாரியளவில் நடைபெறும் அடக்குமுறையைநிறுத்தும்படியாக தராகிக்கு யோசனை கூறியது.

ஆனால், மிக வேகமாக நிலைமைகள் மாறுவதனை அமீன் எதிர்க்கத் தொடங்கினான். 1979 செப்டெம்பர் 14ஆம் திகதி அவனது துணையாட்கள் சனாதிபதி மாளிகையைக் கைப்பற்றினர். முாளிகை மீதான தாக்குதலின் போது, தராகி கடுங்காயத்திற்கு உள்ளானதுடன், மூன்று நாட்களின் பின் இறந்தான். அதிருப்தியாளர்கள் மரணதண்டனைக்குள்ளாவதும் கொல்லப்படுவதும் பெரியளவில் விசாலமடைந்தது. இப்பொழுது மக்கள் முழுக்கிராமமாகவே கொல்லப்பட்டனர். அமீனின் ஆட்சி தண்டனையளிக்கின்ற ஆட்சியென்பது தெளிவானது. இதே ஆண்டு டிசம்பர் 2ஆம் திகதி இவ்விடயத்தை நுட்பமாகக் கையாளும் இடுபணியுடன் காபூலுக்குக் கே.ஜி.பி இன் லெப்டினன்ட் ஜெனரல் விக்டர் படுடின் வந்தார். அமின் தனது அதிகாரத்தை பப்ரக் கர்மெலுக்கு மனமுவந்து கொடுப்பதற்காக அவனை உடன்படச்செய்ய படுடின் முயற்சி செய்யவேண்டியிருந்தது. இந்நேரத்தில் கர்மெல்லின் துணை சனாதிபதிப் பதவி பறிக்கப்பட்டு, அவன் செக்கோசிலவாக்கியாவில் தூதராகப் பணியாற்றிக்கொண்டிருந்தான். இதனைச் செய்ய அமின் தீர்மானமாக மறுத்துவிட்டான்.

இவ்வாறான திட்டம் வகைசெய்யப்பட்டிருந்தது. சர்வாதிகாரியின் பதவி விலகல் சம்மதத்தையோ அல்லது சம்மதமின்மையையோ பொருட்படுத்தாமல், எச் சூழ்நிலையிலும் ஆப்கானிஸ்தானுக்குள் சோவியத் படைகளை அனுப்புவது அவசியம் எனவும் கருதப்பட்டது. கிளர்ச்சியாளர்களுடன் சமர் புரிகின்ற அரச படைகளுக்குச் சோவியத் படைகள் தமது வலிமையுடன் ஆதரவளிக்கலாம்.

ஆகவே தான், உத்தியோகபூர்வமாகப் படைகளை வரவழைக்க அமீன் சோவியத் ரசியாவைக் கோரவேண்டும் என்ற இணக்கப்பாட்டுக்கு அவனைச் சம்மதிக்கச்செய்ய படுடின் முயற்சி செய்தான். அமீன் இராணுவ உதவியை எதிர்க்கவில்லை. ஆனால், பலம் வாய்ந்த வடபுல அயலவனிடம் இதைப் பகிரங்கமாகக் கேட்க அவன் விரும்பவில்லை.

1979 ஆம் ஆண்டு டிசம்பர் 25 ஆம் நாள் காபூலுக்கு 50 கி.மீ வடக்கேயுள்ள பக்ராம் விமானத்தளத்தில் போக்குவரத்து விமானங்களான ஐ.எல்-76, ஏ.என்-22, ஏ.என்-12 ஆகியன வான்குடை டிவிசனின் 105 ஆவது கவச வாகன ரெஜிமெண்டுடனும் ஆளணிகளுடனும் தரையிறங்கத் தொடங்கின.

துரையிறக்கம் மூன்று நாட்களாகத் தொடர்ந்தது. இந்நேரத்தில், அமீன் தனது பாதுகாப்புப் பிரச்சினை பற்றி மிகவும் கலவரமடைந்து, தலை நகரின் புறநகர்ப் பகுதியிலுள்ள, நன்றாகப் பலப்படுத்தப்பட்ட டார் - உடல் - அமான் (அல்லது தட்ஜ் பேக்) மாளிகையில் மறைந்துகொண்டான். ஆங்கு படுடின் சென்று, மீளவும் அமீனைப் பதவி விலகச் சம்மதிப்பதற்கான முயற்சிகளைத் தொடர்ந்தான். .தற்குமுன்னர், சோவியத் இராணுவ உதவியைக் கோரிப் பிரசுரிக்கும் படியும் கேட்டுக்கொண்டான். பேச்சுக்கள் மிகவும் சூடான போக்கைக் கொண்டிருக்க, அமீனின் மெய்க்காவலன் படுடினைச் சுட்டுக்கொன்றான்.


புடைகளைப் பயன்படுத்தி அமீனைக் களைவதைவிட, வேறொன்றும் எஞ்சவில்லை. டிசம்பர் 27ஆம் நாள் மாலையில் 50 பேரைக் கொண்ட கே.ஜி.பி. யின் சிறப்புக்குழு மாளிகைக்குள் புகுந்து கொண்டதுடன், அடம்பிடித்துக்கொண்டிருந்த கொடுங்கோலனைக் கொலையும் செய்தது. அதேநேரத்தில் பர்சாம் பிளவுக் கட்சியின் ஆட்களுடன் சேர்ந்து ஏனைய சிறப்புக்குழுக்கள் அமீனின் ஆட்சியிலிருந்த உயர் அதிகாரிகளையும் உறுப்பினர்களையும் கொலை செய்தன அல்லது கைது செய்தன.

வான்குடை வீரர்களினது 105 ஆவது டிவிசனின் சில பிரிவுகள் காபூலுக்குள் புகுந்து, மூலோபாய முக்கியத்துவம்வாய்ந்த நிலைகளைக் கைப்பற்றின. காபூலில் புரட்சி தொடங்குவதற்கான சமிக்கை கிடைத்ததும் 40 ஆவது இராணுவப்பிரிவு ஆப்கானிஸ்தான் மீதான படையெடுப்பை மேற்கொண்டது. இதனது 66 ஆவதும் 357 ஆவதும் கனரக வாகன டிவிசன்கள் குஸ்காவிலிருந்து புறப்புட்டுக் கெராட்டைச் சென்றடைந்து, அடுத்தபடியாக ஃபராகினூடாக லஸ்கர்கானைச் சென்றடைந்தது. 201 ஆவதும் 360 ஆவதும் டிவிசன்கள் தெர்மேசிலிருந்து மசாரி-சரீவைக் கடந்து தெற்கே சென்று, சலாங் கணவாயிலுள்ள மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த சுரங்கப்பாதையைக் கைப்பற்றி, பின்னர் கிழக்காகச் சென்று ஃபய்சாபாத் நகரைச் சென்றடைந்து. கூடுதலான இடங்களில் ஆப்கானிஸ்தானிய இராணுவம் எதிர்ப்பைத் தெரிவிக்க முயன்றது. ஆனால், நீண்ட நேரத்திற்கு அவர்களால் தாக்குப்பிடிக்க முடியவில்லை. கந்தகார் நகரப் பகுதியில் சோவியத் படைகளின் இரண்டு வாகனத் தொடரணிகளும் சந்தித்து முற்றுகை வட்டத்தை ஏற்படுத்தின.

**நெற்றிபொறியன்**

**தொடர்வான்...**

# இலங்கையில் அதிகரிக்கும் கொரோனாத் தொற்றும், மரணங்களின் எண்ணிக்கையும்



நாட்டில் மிக வேகமாக பரவி வரும் கொரோனாத் தொற்றினை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர குறைந்தது நான்கு வாரங்களுக்கேனும் நாட்டை முடக்க வேண்டும் என சுகாதார தரப்பினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அதேவேளை எதிர்வரும் நாட்களில் நாட்டில் கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை மற்றும் மரணங்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரிக்கும் என பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது. தொற்றாளர்கள் அதிகரிப்பை கட்டுப்படுத்தவில்லை என்றால் பாரிய அழிவினை சந்திக்க வேண்டி ஏற்படும் எனவும், தாமதிக்கும் ஒவ்வொரு நொடியும் பல உயிர்கள் பறிபோகலாம் எனவும் அச் சங்கம் தெரிவித்துள்ளது.

நாட்டில் தற்போது கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை உயர்வடைந்து வருகின்ற நிலையில், கொரோனா மரணங்களின் எண்ணிக்கையும்அதிகரித்துவருவதுடன் டெல்டாவும் மிக வேகமாக பரவி வருகிறது. அத்துடன், நாளாந்தம் கொரோனாவினால் சம்பவிக்கும் மரணங்களின் எண்ணிக்கை நூறைக் கடந்திருப்பதும் நாட்டில் பரவியிருக்கும் கொரோனாவின் வீரியத்தினை உணர்த்தி நிற்கிறது.

இதேவேளை நாட்டினுடைய பொருளாதாரம் குறித்தும் அச்சமடையவேண்டிய நிலை தோன்றியுள்ளது. அத்தியாவசியப் பொருட்களுக்கான தேவைகள் அதிகரித்துள்ள நிலையில், உணவுப் பொருட்களுக்கான விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளமையும், சில பொருட்களுக்கு நாட்டில் தட்டுப்பாடு நிலவுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

நாட்டு மக்கள் வாழ்வாதாரத்திற்குத் தேவையான உணவுப்பொருட்களை வாங்கிவியலாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

விலைகள் இரவோடிரவாக அதிகரிக்கப்படுகிறது. பொருட்களுக்குத் தட்டுப்பாடு நிலவ ஆரம்பித்துள்ளது. கடைகளில் தேவையான பொருட்களைப் பெற முடியாமல் மக்கள் அல்லல்படவேண்டிய நிலை உருவாகியுள்ளது. மஞ்சள், பால் மா, சீனி, பருப்பு, சமையல் எரிவாயு போன்ற பொருட்களைக் கொள்வனவு செய்ய மக்கள் காத்திருந்தும் கிடைக்காமல் திரும்பவேண்டிய நிலை.

இலங்கையில் சமையல் எரிவாயுவின்விலையைஉயர்த்துவதற்கு லிட்ரோ மற்றும் LAUGFS Gas நிறுவனங்கள் அண்மையில் அனுமதி கோரியிருந்தன. எனினும், விலை அதிகரிக்கப்படாத பின்புலத்தில் LAUGFS Gas நிறுவனம் எரிவாயு இறக்குமதியை நிறுத்த நடவடிக்கை எடுத்தது.

இந்த நிலையில் நாட்டில் சமையல் எரிவாயுவிற்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் தற்போது மண்ணெண்ணெய் பெற்றுக் கொள்வதற்காக மக்கள் வரிசையில் நிற்பதை காணக்கூடியதாக உள்ளது. தனியார் மருத்து நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் பிசிஆர் சோதனைகளுக்கு அரசாங்கம் அதிகபட்ச விலையை நிர்ணயித்துள்ளதாக சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில் பிசிஆர் பரிசோதனைக்கு 6.500 ரூபாவும் அன்டிஜன் பரிசோதனைக்கு 2.000 ரூபாவும் மாத்திரமே அறவிட முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நாட்டினுடைய அனைத்துத் துறைகளும் முடக்கப்பட்டுள்ளதுடன், பகுதியளவில் சில அத்தியாவசியமான துறைகள் இயக்கப்படுகின்றன. அரச உத்தியோகத்தர்கள் கூட இன்னமும் கடமைக்கு முழுமையாக அழைக்கப்படவில்லை. நாட்டின் அனைத்துப் பாடசாலைகளும் மூடப்பட்டுள்ளதுடன், மாணவர்கள் இணையவழியில் தமது கல்வி நடவடிக்கைகளை முன்னெடுத்துவந்தபோதிலும், அதிபர் ஆசிரியர்கள் போராட்டங்களை முன்னெடுத்து வருவதனால் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட கொவிட் செயலணியினது செயற்பாடுகள் குறித்து தற்போது தெற்கிலும் எதிர்ப்புக்கள் வெளிவர ஆரம்பித்துள்ளன. பாராளுமன்ற உறுப்பினர் ரணில் விக்ரமசிங்க அவர்கள் நேரடியாக இச்செயலணி குறித்து தனது கருத்துக்களை வெளியிட்டு வருகின்றார்.

நாட்டு மக்களது வாழ்வாதாரம் முழுவதுமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. வேலைகளுக்குச் செல்ல முடியாமல், பிற மாவட்டங்களில் வேலை செய்தோர் என பலர் இன்று பொருளாதார ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். அரசின் சலுகைகள் இவ் இக்கட்டான காலத்தில் மக்களுக்குப் போதியதாக இருக்கவில்லை. 5000.00 ரூபாய் வழங்கும் நடவடிக்கையிலும் பாரிய சிக்கல்கள் எழுந்து மறைந்துள்ளது. நாட்டு மக்கள் அனைவருக்கும் இவ் பணம் கிடைக்கப்பெறவில்லை அல்லது தரமறுக்கிறார்கள் என்கிற குற்றச்சாட்டுக்களும், ஆர்ப்பாட்டங்களும் நடந்து அடங்கிப்போயுள்ளது.

இன்று பாராளுமன்றில் அரசினது கொவிட் ஒழிப்பு செயற்பாடுகள் குறித்து எதிர்க்கட்சியினர் நேரடியாக வாதப்பிரதிவாதங்களை மேற்கொண்டு வருகின்றனர். அரசு செய்வதறியாது மக்களே உங்களை நீங்களே பாதுகாத்துக்கொள்ளுங்கள் என்ற தோரணையில் செயற்படுகிறது.

தடுப்பூசிகள் வழங்கும் நடவடிக்கைகளும் மந்தகதியில் இடம்பெறுகிறது. மக்களை வீணாக அங்கு வா இங்கு வா என அலைக்கழிக்கின்ற நிலைமையினை நாம் காண்கிறோம். போதியளவு சுகாதார ஊழியர்கள் நாட்டில் கடமையில் இருந்தும் இந்நிலை தோன்றியுள்ளது.

நாட்டினுடைய மிக முக்கியத்துறையினரான சுகாதாரத் துறையினர், கல்வித் துறையினர் தமது கோரிக்கைகளை முன்வைத்து தமது கடமைகளைப் புறக்கணித்து வருகின்றனர். இதனால் பாதிக்கப்படுவது யார்? நாட்டில் ஒவ்வொரு மனித்தியாலயத்திற்கும் கொவிட் தொற்றுக்குள்ளான 5 பேர் உயிரிழக்கும் சூழல் ஏற்பட்டுள்ளதாக இலங்கை வைத்திய சங்கம் தெரிவித்துள்ளது.

தற்போது பதிவாகும் தொற்றாளர்களை விட பல மடங்கு தொற்றாளர்கள் சமூகத்தில் உள்ளதாக அவர் தெரிவித்தார். அதே போல், இதுவரை 19 கர்ப்பிணித் தாய்மார்கள் கொவிட் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளதாக சுகாதார அமைச்சின் குடும்ப நல சுகாதார சேவை பணியகத்தின் பணிப்பாளர் வைத்திய நிபுணர் சித்ரமாலி டி சில்வா சுட்டிக்காட்டியுள்ளார். இதே வேளை, இதுவரை கிடைக்கப்பெற்றுள்ள தரவுகளுக்கு அமைய சுமார் ஆயிரம் தாதியர்களுக்கு கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அரச தாதிய அதிகாரிகளின் சங்கம் தெரிவித்துள்ளது.

கொவிட் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்த 5.222 பேரில் 5.022 பேர் கொவிட் தொற்றுக்கான தடுப்பூசியை பெற்றுக்கொள்ளவில்லைஎன்றுசுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்த்தன தெரிவித்துள்ளார். எஞ்சிய 200 பேரில் 177 பேர் ஒரு தடுப்பூசியை மாத்திரம் பெற்றவர்கள். ஏனைய 23 பேர் இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுக் கொண்டுள்ளனர். இருப்பினும், இந்தத் தடுப்பூசி இரண்டையும் பெற்று உயிரிழந்தவர்களுக்கு ஏனைய நோய்கள் பல இருந்தமை அடையாளம் காணப்பட்டுள்ளன.

இதேவேளை, கொரோனா தொற்றுக்கு உள்ளானவர் என அடையாளம் காணப்பட்டு, இருப்பினும் நோய் அறிகுறிகள் தென்படாத 7 ஆயிரத்திற்கு மேற்பட்டோர் கம்பஹா மாவட்டத்தில் இருப்பதாக நடைபெற்ற மாவட்ட கொவிட் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான சுகாதாரத் துறை சார்ந்தவர்களுடைய கருத்துக்களைப் பார்க்கின்றபோது இலங்கை மிகவும் ஆபத்தான நிலை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதை நாம் தெளிவாகப் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால் பொறுப்புக்கூறவேண்டிய அரசு இன்னமும் மௌனமாகவிருப்பது குறித்தும் கேள்வி எழுகின்றது.

அதேநேரம் நாட்டில் கடந்த 11 ஆம் திகதி மாத்திரம் 81.000 பேருக்கு சீனாவின் சைனோபார்ம் தடுப்பூசியின் முதலாவது டோஸ் போடப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு அறிக்கை ஒன்றை வெளியிட்டு இதனை குறிப்பிட்டுள்ளது. மேலும், சைனோபார்ம் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் நேற்று 228.790 பேருக்கு போடப்பட்டுள்ளதாக தொற்றுநோயியல் பிரிவு குறிப்பிட்டுள்ளது. இதேவேளை, இதுவரை 868.058 பேருக்கு கொவிசீல்ட் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் போடப்பட்டுள்ளது.

அத்துடன் இதுவரை 159.081 பேருக்கு ஸ்புட்னிக் ஏ தடுப்பூசியின் முதலாவது டோஸ் போடப்பட்டுள்ளதாக தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது. மேலும் 14.516 பேருக்கு ஸ்புட்னிக் ஏ தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் போடப்பட்டுள்ளது. அதே போல், இதுவரை 251.846 பேருக்கு ஃபைசர் தடுப்பூசியின் முதலாவது டோஸ் போடப்பட்டுள்ள நிலையில், 761.136 பேருக்கு மொடர்னா தடுப்பூசியின் முதலாவது டோஸ் போடப்பட்டுள்ளது. இலங்கையில் அபிவிருத்தி பணிகளில் ஈடுபட்டுள்ள சீன பிரஜைகள் 2.865 பேருக்கு சைனோபார்ம் தடுப்பூசியின் முதலாவது டோஸ் போடப்பட்டுள்ளதுடன் 2.435 பேருக்கு இரண்டாவது டோஸ் போடப்பட்டுள்ளதாக கடந்த முடிவடைந்த 12ஆம் திகதியுடனான தகவல்கள் தெரிவிக்கின்றன.

இருந்தபோதிலும் இன்னமும் நாட்டு மக்களில் பலர் இவ் தடுப்பூசிகள் தொடர்பில் நம்பிக்கையற்று தேவையற்ற வதந்திகளாலும் சரியான தெளிவூட்டல்கள் இல்லாமையாலும் தடுப்பூசிகளைப் புறக்கணித்தும் வருகின்றனர்.

நாட்டை முடக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டால், சம்பந்தப்பட்ட துறையினர் அது தொடர்பாக நடவடிக்கை எடுப்பார்கள் என கொவிட் நோய் கட்டுப்பாடு தொடர்பான இராஜாங்க அமைச்சர் சுதர்சனி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளதுடன், கடந்த வாரத்துடன் ஒப்பிடுகையில் இந்த வாரம் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை 30 சதவீதம் அதிகரித்துள்ளது. கொவிட் மரணங்களின் எண்ணிக்கை 48.8 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது என்றும், பொது மக்கள் கூடியிருக்கும் இடங்களுக்கு செல்வதை இயன்றளவு குறைத்துக் கொள்ளுமாறும் அவர் மக்களைக் கேட்டுக்கொண்டுள்ளார். எது எவ்வாறாயினும் நாட்டின் தற்போதைய நிலை மக்களுக்கு நன்கு புலப்படும். எனவே நம்மை நாமே பாதுகாத்துக்கொள்வதைத் தவிர வேறுவழியில்லை. சுகாதார வழிமுறைகளை மிகத் தீவிரமாகக் கடைபிடிப்பது கட்டாயமாகும்.

மறவன்

# மாறி மாறி ஆட்சிக்குவரும் அரசுகளும், தொடரும் அதிபர் ஆசிரியர்களின் போராட்டங்களும்

அதிபர் ஆசிரியர்களுடைய சம்பள முரண்பாடு, ஒன்லைன் கற்பித்தலுக்கு மாணவர் ஆசிரியர்களுக்கு போதிய வசதிகளை அரசாங்கம் உடனடியாக ஏற்படுத்தி கொடுக்கவேண்டும். கொத்தலாவல சட்ட மூலத்தை உடனடியாக வாபஸ் பெறவேண்டும் ஆகிய விடையங்களை முன் வைத்து இன்று நாடளாவிய ரீதியில் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

உண்மையில் இது ஒரு தனிமனித போராட்டம் அல்ல மாணவர்களுக்கு எதிரான போராட்டமும் அல்ல. 30 வருட காலத்துக்கு மேலாக அதிபர், ஆசிரியர் சம்பள பிரச்சினைக்கு அரசாங்கங்கள் மாறி மாறி வருகின்றபோதும் இதுவரை ஒரு முன்னேற்றகரமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. எனவே இம்முறை அனைத்து ஆசிரியர்களும் இந்த போராட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்கி வருவதைக் காண்கிறோம்.

கொரோனா தொற்றின் காரணமாக நாடு இன்று முடங்கிப்போயுள்ள நிலையில், நாட்டின் பாடசாலைகள் அனைத்தும் மூடப்பட்டுள்ளன. மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இதனாலேயே அரசினால் இணையவழிக் கற்றல் நடவடிக்கை என்கிற ரீதியில் மாணவர்களுக்கு கல்வியைக் கற்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. எனினும் இவ் கற்றல் செயற்பாடுகள் குறித்தும் இன்றும் பிரச்சினைகள் எழுந்துள்ளன. இவ் இணையவழிக் கற்றலானது கிராமப்புற மாணவர்களின் எட்டாக்கனியாகவே இன்றும் உள்ளது. வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாணவர்கள் ஒரு பெறுமதியான தொலைபேசியையோ அல்லது கணனிகளையோ பெறுவது எவ்வாறு?

கொத்தலாவலை என்பது பல்கலைக்கழகங்களை தனியார் மயப்படுத்தி இராணுவத்தை அதற்குள் உட்புகுத்தி பல்லைக்கழக மாணவர்களின் சுதந்திரத்தை தடுப்பது, தனியார் மயப்படுத்துகின்ற மற்றும் அகிம்சை போராட்டங்களில் ஈடுபட்ட ஆசிரியர்களை கைது செய்ததை வன்மையாகக் கண்டிக்கவேண்டியுள்ளது.

இதேவேளை கடந்த ஒன்றரை வருடங்களாக மாணவர்கள் கற்றல் விடையத்தில் பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இதுவரை இதற்கான முழுமையான தீர்வுகளை அரசாங்கம் வழங்கவில்லை. அரசின் தொடர்ச்சியான இவ்வாறான அசமந்தப் போக்குகளைக் கண்டித்தே இம்முறை நாடு தழுவிய ரீதியில் ஆசிரியர்களின் போராட்டம் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதேவேளை ஆசிரியர்களின் சம்பள பிரச்சினையை தீர்ப்பதற்கும் மற்றும் ஆராய்ந்து பரிந்துரைகளை முன்வைப்பதற்கும் 4 பேர் கொண்ட அமைச்சரவை குழு ஒன்று அரசினால் நியமிக்கப்பட்டுள்ளது. அமைச்சரவை குழு கூட்டத்தின் போது குறித்த அமைச்சரவை குழு நியமிக்கப்பட்டதாக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார். அதன்படி, அமைச்சர்களான விமல் வீரவன்ச, பிரசன்ன ரணதுங்க, மஹிந்த அமரவீர மற்றும் டளஸ் அழகப்பெரும ஆகியவர்கள் குறித்த குழுவின் அங்கத்தவர்களாக நியமிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.



ஒரு நாட்டினுடைய வளர்ச்சியில் மாணவர்களின் பங்கு என்பது அளப்பரியது. எதிர்காலத்தில் நாட்டின் அனைத்துத் துறைகளையும் வெற்றிகரமாக கொண்டு செல்லக்கூடியவர்கள் இன்றைய மாணவர்கள். அவர்கள் தான் இந்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு எதிர்காலத்தில் கைகொடுக்க விருப்பவர்கள். அவ்வாறெனின் ஒரு நாட்டின் கல்விச் செயற்பாடுகள் தங்குதடையின்றி சிறப்பாக முன்னெடுக்கப்படவேண்டும்.

கல்வியைக் கற்றுக் கொடுக்கும் ஆசிரியர்கள் எந்தவித சிக்கல்களுமின்றி தெளிவான பார்வையுடன் பாடசாலைகளுக்குச் சென்று கல்வி புகட்டவேண்டும். இன்று அவர்கள் மனதளவில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நாட்டினுடைய அரசியல் செயற்பாடுகள் இந்த ஆசிரியர்களின் விடயங்களில் செல்வாக்கு செலுத்தும் ஒன்றாக மாறி, அவர்களுக்கான தீர்வுகளைப் பெற்றுக்கொள்ள முடியாமல் ஆசிரியர்கள் இன்று வீதிகளுக்கு இறங்கி போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். எந்தவொரு நாட்டிலும் நடைபெறாத ஒன்று இன்றுநமதுநாட்டில்நடைபெற்று வருவது நாட்டினுடைய நிலைமையை வெளியுலகுக்கு உணர்த்தி நிற்கிறது. மகத்தான கல்வியை வழங்குபவர்கள் சம்பள முரண்பாடுகளுக்குள் சிக்குண்டுள்ளனர். திட்டமிட்டபடி அரசியல் ரீதியாக பழிவாங்கப்படும் நிலை தொடர்கின்றது.

2020 சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றிய 622000 மாணவர்களில் 169000 வரையிலான மாணவர்கள் அழகியல் பாடத்தை பயின்றிருப்பதாகவும் குறித்த பாடங்களுக்கான பிரயோக பரீட்சைகளுக்காக முகங்கொடுக்க இருப்பதாகவும் கொவிட் நிலைமை காரணமாக பிரயோக பரீட்சையை நடத்த முடியாது உள்ளதாகவும் இப் பரீட்சைகளை முடிந்தளவு அவசரமாக நடத்தி முடித்து பெறுபேறுகளை வெளியிடுவதற்கு ஆயத்தமாகவிருந்த போதிலும் தொழிற்சங்கங்கள் பரீட்சை நடவடிக்கைகளிலிருந்து விலகி இருப்பதன் காரணமாக 620000 மாணவர்களின் பெறுபேறுகளை வெளியிட முடியாதிருப்பதாக கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.


அதிபர் ஆசிரியர்களது சம்பளப் பிரச்சினைக்கு கடந்த கால அரசுகள் தீர்வு வழங்கவில்லை. எனினும் தற்போதைய அரசு உரிய தீர்வுகளை காலம்தாழ்த்தாது, பேச்சுவார்த்தைகள் என்கிற போர்வையில் ஏமாற்றாமல், மாணவர்களின் எதிர்கால கல்விச் செயற்பாடுகளைக் கருத்திற்கொண்டு, தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்கவேண்டும் என்பதுவே எமதும் கோரிக்கையாகும்.



மகிழன்

# விடுதலைப்புலிகள் பயங்கரவாதிகள் அல்ல புரட்சியாளர்களே – சி.வி. விக்னேஸ்வரன்

பாராளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரன் அவர்களுடனான நேர்காணல்



கடந்தவார தொடர்ச்சி...

**கேள்வி:- பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை பொறுத்தவரையில் முழுமையாக இன்னும் விடுதலை செய்யப்படாமல் இருக்கின்றார்கள் அதற்கான காரணம் என்ன?**

**பதில் :** அரசியல் தான் காரணம் வேறு ஒன்றும் இல்லை. குற்றவாளியாக காணப்பட்ட சிங்களவர் ஒருவரை ஒரு அரசாங்கம் விடுதலை செய்ய வேண்டும் என்றால் பல வருடங்கள் சிறையில் வாழும் தமிழ் சிறைக்கைதிகள் சிலருடன் சேர்த்து அவரை விடுதலை செய்வார்கள். இல்லையெனில் தமிழ் சிறை கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் என்றால் குற்றவாளிகளாக்கப்பட்ட சிங்களவர்களை சிறையிலிருந்து விடுவிக்க சம்மதமா என்று பேரம் பேசுவார்கள்.எங்களுடன் பேசியிருந்தார்கள் அந்த நேரத்திலே மிருசுவில் வழக்கிலே குற்றவாளியாக காணப்பட்டு தற்பொழுது வெளியில் விடப்பட்டிருந்த நேரத்திலே நான் இவர்கள் சிலரையும் விடுகின்றோம் அவரையும் விடுவதற்கு சம்மதமா என்று. கேட்டிருந்தோம். அது நீதிமன்றத்தால் நடைபெற்ற விடயம் நீதிமன்றத்தில் போய் கேளுங்கள் இது அரசியல் ரீதியான விடயம் என்று கூறிவிட்டனர். அவர்கள் அவ்வாறு தான் பேரம் பேசுகின்றார்கள் நீங்கள் அவர்களை விடுங்கள் நாங்கள் எங்களுடைய ஆட்களை வெளியில் எடுக்கின்றோம் என்று.

ஒட்டுமொத்தத்தையும் பார்த்தோமானால் தமிழ் அரசியல் சிறை கைதி-களை சிங்கள அரசாங்கங்கள் உள்ளே வைத்திருப்பது கொடூரமான குற்றங்களுக்கு குற்றவாளியாக்கப்பட்ட தமது சிங்கள நண்பர்களை அல்லது கையாற்களை காலம் வரும் பொழுது விடுவிப்பதற்காகவே என்பது என்னுடைய கருத்து. நீங்கள் நினைக்கலாம் ஒரு மிகவும் பாரதூரமானது என்று கருதப்பட்ட குற்றங்களில் ஈடுபட்டவர்களை இன்னமும் சிறையில் வைத்துக்கொண்டு இருக்கின்றார்கள். அது உண்மை அது எதற்காகவென்றால் அவர்களையும் வைத்துக்கொண்டு வேறு சிலரையும் வைத்துக்கொண்டு பேரம் பேசுவதற்காகத் தான் இதையெல்லாம் செய்கின்றார்கள். அவர்களுக்கு போதுமானளவு பேரம் பேசுவதற்கு காரணம் ஏற்படும் பொழுது இவர்களையும் விடுவிக்க முன்வருவார்கள் என்பது என்னுடைய கருத்து. ஆனால் இப்போதைக்கு 105 பேர் அங்கு இருக்கின்றார்கள் அவர்களை விடுவிக்கின்றார்கள் இல்லை. சட்ட ரீதியாக இல்லை அரசியல் ரீதியான காரணங்களுக்காக.

**கேள்வி : நீங்கள் நீதியரசராக இருந்த பொழுது பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தண்டனைகளை வழங்கியிருக்கின்றீர்களா?**

**பதில் :** இல்லை. முறையீடுகளை முதலில் நடைமுறைப்படுத்துவதுமேன்முறையீட்டு நீதிமன்றத்தில். நான் மேல் நீதிமன்ற பயங்கரவாத தடைச்சட்டங்களை கேட்க மறுத்தேன். மறுத்து மிக கடுமையான வங்கிக் குற்ற வழக்குகளை தேர்ந்தெடுத்தேன். கடுமை என்று நான் கூறுவது அந்த வழக்குகளிலே மிக நுட்பமாக கணக்குகளை பரிசீலிக்க வேண்டும். ஆகவே நான் அந்த கஷ்டமான வழக்குகளை ஏற்றுக்கொண்டேனே தவிர இவற்றை நான் ஏற்றுக்கொள்ள முடியாது என்று கூறியிருந்தேன். பல நீதிபதிகள் அதை கேட்காத காரணத்தினால் அவற்றை ஏற்று நடத்தினேன். ஆனால் JVP தலைவர் மோகன விஜய வீரனின் மைத்துனன் சுபாஸ் சந்திர பனான்டோக்கு எதிராக பதியப்பட்ட பொய் வழக்கு ஒன்றை நான் கேட்டேன். அதை நான் வேறு எங்காவது அனுப்புவதற்கு தான் இருந்தேன் ஆனால் இழைக்கப்பட்ட கொடூரமான சம்பவங்கள் தொடர்பில் அவர் நீதிமன்றிலே வெளிப்படையாக கூறியதன் காரணத்தினால் அந்த வழக்கை நான் எடுத்து நடத்தினேன். அவரை விடுதலை செய்தேன் அது பிழையான பொய்யான வழக்கு என்று கண்டு நான் மேல்நீதிமன்ற நீதிபதியாக எவருக்குமே தண்டனை வழக்கவில்லை. தண்டனை வழங்கினீர்களா? என்று கேட்டிருந்தீர்கள் தண்டனை எவருக்குமே வழங்கவில்லை, பலரை விடுவித்தேன். உச்ச நீதிமன்றத்தின் மேன் முறையீடுகளை கேட்டேன். அங்கே சுப்ரின் கோர்ட்டிற்கு சென்ற பொழுது அப்பொழுது தான் நான் மேற்கூறிய நாகமணி வழக்கில் ஒரு தீர்ப்பை அளித்திக்கின்றேன். ஆகவே மொத்தமாக எந்தவொரு வழக்கிலும் குற்றவாளியாக நான் எவரையுமே காணவில்லை.

அவ்வாறெல்லாம் நான் தண்டனை கொடுத்தாக இணையதளங்களிலே இருந்தது. அவ்வாறு நான் கொடுத்திருந்தால் அதை காட்ட சொல்லுங்கள் அவ்வாறு நடந்ததா என்று நான் கூறுகின்றேன். நான் நீதியரசராக வந்த காலம் தொடக்கம் என்னென்ன வழக்குகளை நான் கேட்டேன் அதற்கு கொடுத்த தீர்ப்புகள் அனைத்தும் அப்படியே என்னிடம் இருக்கின்றன. ஆகவே எந்த வழக்கை கேட்டாலும் எந்த தினத்தை கேட்டாலும் நான் அதை பார்த்து கூறுவேன்.

**கேள்வி : மத்திய வங்கி குண்டு வெடிப்பு தாக்குதலில் பிரபாகரன் பொட்டம்மன் மற்றும் நவரத்தினம் ஐயா ஆகிய மூவருக்கும் அதாவது தலா ஒருவருக்கு 200 வருடங்கள் என மொத்தமாக 600 வருடங்கள் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. நவரத்தினம் அவர்கள் என்னுடன் வெளிக்கடை சிறைச்சாலையிலே இருந்தார் பின்னர் அவர் வேறு சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டார். அப்பொழுது நாங்கள் அவரிடம் கேட்ட கேள்வி ஒன்று உங்களுக்கு 200 வருடங்கள் சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளதே இது புதிராக இருக்கின்றது ஏன் அவ்வாறு வழங்கப்பட்டது என்று. உண்மையிலே 600 வருடங்கள் வழங்கி ஒவ்வொருவருக்கும் 200 வருடங்கள் தண்டனை வழக்கி இருக்கின்றது அது சட்டத்தில் இருக்கின்றதா?**

**பதில் :** பொதுவாக ஒருவருக்கு எதிராக பல பேரிற்கு கீழ் திரிபவர்கள் பலருக்கும் தண்டனை விதிக்கப்பட வேண்டி இருந்தது. குற்றவாளியாக கண்டதன் பிற்பாடு அவர்களுக்கு தண்டனை விதிக்கும் பொழுது குறித்த தண்டனை காலங்களை ஒருமித்து இயக்கி தான் நாங்கள் தண்டனை தீர்ப்பை வழங்குவோம். உதாரணமாக ஒருவர் ஒரு காரியத்தின் பொழுது ஏமாற்றி இருந்தால் அதற்கு ஒரு சிறைத்தண்டனை. அதே நேரம் நம்பிக்கை துரோகம் செய்திருந்தால் அது இன்னுமொரு பிரிவின் கீழ் அதற்கு ஒரு சிறைத்தண்டனை கொடுத்து அது இரண்டும் ஒரே காலத்தில் நிறைவேற்றப்பட வேண்டும் என்று கூறியிருந்தோம்.

அதாவது ஏமாற்றியதற்கு 10 வருட காலமும் நம்பிக்கை துரோகத்திற்கு 10 வருட காலங்கள் என்று இருந்தாலும் அவர் அனுபவிக்க போகும் மொத்த சிறைத்தண்டனை 10 வருடங்களாக தான் இருக்கும். பிரபாகரன் போன்றவர்கள் மீது சிங்கள நீதிபதிகளுக்கு இருந்த கடும் கோபம் பயம் பீதி போன்ற காரணங்களால் அவர்கள் பல குற்றங்களுக்கு கொடுத்த தண்டனை ஒன்றன் பின் ஒன்றாக அனுபவிக்கப்பட வேண்டும் என்று தீர்ப்பளித்தார்கள்.

நாங்கள் வழமையாக ஒரு குற்றத்திற்கு 10 வருடங்களும் மற்றைய குற்றத்திற்கு 10 வருடங்களுமாக மொத்தமாக 10 வருடங்கள் மாத்திரம் தான் தண்டனை அனுபவிக்க வேண்டும். இவர்கள் ஒரு குற்றத்திற்கு 10 வருடங்கள் வீதம் இவ்வாறு கூட்டித்தான் 200 வருடங்கள் கொடுத்தார்கள். அதனால் தான் அவர்களுடைய தண்டனை காலங்கள் 200 வருடங்களுக்கு நீண்டன. நீதிபதிகளின் எதிரிடையான எண்ணங்களின் பிரதிபலிப்புக்களே இவை. அவர்களுக்கு அந்தளவுக்கு கொடூரமான கோபம் இருந்தது. அவர்கள் தங்களுடைய கோபத்தை இந்த தண்டனை காலத்தை ஒன்றன் பின் ஒன்றாக போட்டுத்தான் காட்டினார்கள.

அவர்களின் ஆயுள் முடியும் வரை வெளியிலே வரக்கூடாது என்ற எண்ணத்திலே இதை செய்தார்கள். அவ்வாறு செய்யாமலே இந்தியாவில் ரஜீவ் காந்தியின் குற்றவாளிகள் என தீர்ப்பளிக்கப்பட்டவர்கள் 30 வருடகாலங்கள் அங்கு இருந்திருக்கின்றார்கள். ஏனென்றால் எங்களுடைய பிரைம் மினிஸ்டர் கொலை செய்வதற்காக உடந்தையாக இருந்தவர். இதனால் விட்டுக்கொடுக்க கூடாது இவ்வளவு காலம் இருக்க வேண்டும் என்று நினைத்தார்கள். அதே மாதிரி தான் அவர்களுடைய மனோ நிலை தான் பிரதிபலிக்கின்றதே தவிர சட்டம் அந்தளவு கடுமையானதல்ல.

**நெற்றிப்பொறியன்**

# மலையகத் தமிழர் வறுமை நிலையை பயன்படுத்தி அழைத்து வரப்பட்ட இனமே மலையக தமிழ் இனம்

கி.பி 1820–1840 காலகட்டத்தில் இந்தியாவின் தென் மாநிலத்திலிருந்து இலங்கைக்கு தொழில் நிமித்தம் காலனியாதிக்க ஆங்கிலேயரால் அழைத்து வரப்பட்டவர்களே மலையக தமிழ் மக்கள். ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பனியும், ஆளுநரும் சேர்ந்து மலையக பிரதேசங்களில் பெருந்தோட்ட வர்த்தக பயிர் செய்கையை மேற்கொள்ள மனித வளம் கிடைக்கப் பெறாத சூழ்நிலையில் இலங்கையின் அப்போதைய குடிகள் (ஆங்கிலேயர் ஆதிக்கத்தின் கீழ் இருந்தவர்கள். அடிப்பணிந்து வேலை செய்ய இணங்காமையினால், வறுமை நிலையை பயன்படுத்தி அழைத்து வரப்பட்ட இனமே மலையக தமிழ் இனம்.

பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில், கொத்தடிமைகளாக அழைத்துவரப்பட்ட மக்கள் இடையில் கப்பல் மூழ்கியும் பயணத்தின் போது நோய்வாய்ப்பட்டு பலர் மாண்டும் மன்னாரை வந்தடைந்தனர். பின் நடையாக இலங்கையின் மத்திய பிரதேசத்திற்கு அழைத்து வரப்பட்டனர் தற்காலிக குதிரை லாயங்களில் தங்க வைக்கப்பட்ட இவர்கள் இன்று வரை ( அதையொத்த ) அதே வீடுகளில் வாழ்ந்து வருகின்றனர். 1931ம் ஆண்டு டொனமூர் சீர்திருத்தம் மூலம் வாக்குரிமை பெற்ற போதும் அது 1947, 1948 களில் கொண்டு வரப்பட்ட இந்திய பாகிஸ்தானிய ஒப்பந்தம், சிறிமா–சாஸ்த்ரி ஒப்பந்தம், பிரஜாவுரிமை சட்டங்களின் மூலமாக பறிக்கப்பட்டு பலர் 2003ம் ஆண்டு வரை நாடற்றவர்களாக வாழ்ந்து வந்துள்ளனர்.

1972ம் ஆண்டில் பெருந்தோட்டங்களை அரசாங்கம் பொறுப்பேற்ற போதும் பழைய விதமான கொத்தடிமை வாழ்க்கையும், சுரண்டலும், இன்னல்களும் இந்த மக்களை பொருத்த மட்டில் குறையவே இல்லை, அவர்கள் ஒரு தேசிய இனமாக கருதப்படவும் இல்லை.

உலகின் மிகவும் கொடுரமாக மக்களை நடாத்திய நாடுகளின் பட்டியலில் இலங்கையும் உள்ளடங்கி இருக்கக்கூடிய அளவுக்கு மக்கள் உரிமைகள் மிகமோசமாக மீறப்பட்டன. இவ்வாறான கொடுமைகளிலிருந்தே மீண்டு வருவதற்கு முடியாத இனமாக வாழும் மலையக மக்களின் மனித உரிமைகளின் நிலை பற்றி நான் எடுத்தாராய தீர்மானித்தேன்.

2. மலையக மக்களின் உரிமைகளைப் பேண அரசு வழங்கிய சர்வசன வாக்குரிமை திட்டம்.

மலையக மக்களின் அரசியல் வரலாற்றில் சர்வசன வாக்குரிமைக்கு உரித்துடையவர்களாக்கப்பட்டமை மிகவும் முக்கிய விடயமாகும். டொனமூர் சீர்திருத்தங்களுக்கு முன்னர் குடித் தொகையில் 4% மக்களே வாக்களிக்கும் உரிமை பெற்றிருந்தனர். வாக்குரிமைக்கு தகுதியாக கல்வி ,சொத்து, வருமானம் இருந்தமையினால் ஏனைய பொது மக்களைப் போலவே மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு வாக்குரிமை பெற்றிருக்கவில்லை. எனினும் டொனமூர் குழு நாட்டில் நிலையான அக்கறையுடையோர் அல்லது நிலையாக வசிக்கும் 21 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு வாக்குரிமையை சிபாரிசு செய்தது. இச் சிபாரிசுடன் பெண்களுக்கும் மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கும் வாக்குரிமை வழங்குவது பற்றிய பிரச்சினை பலத்த வாதப் பிரதிவாதங்களுக்கு உட்பட்டது. சர்வசன வாக்குரிமை தொடர்பாக இடம்பெற்ற அனைத்து விவாதங்களையும் கருத்துகளையும் ஆராய்ந்த பின்னர் டொனமூர் குழு முடிவில் இலங்கையைத் தாயகமாகக் கொண்டோர் அல்லது ஐந்து வருடங்கள் வாழ்ந்து கல்வி சொத்து வருமானத் தகைமை கொண்டோர் அல்லது ஐந்து வருடங்கள் தொடர்ச்சியாக வசித்து மேலும் நிலையாக வசிக்கும் நோக்கமுடையோருக்கு வழங்கப்படும் குடியுரிமை சான்றிதழைப் பெற்றோர் ஆகியோருக்கு வாக்குரிமை வழங்குவதற்கு ஏற்பாடுகளைச்செய்தது.

இதில் மூன்றாவது வகை சார்ந்து மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் வாக்குரிமையை பெறுவதற்கான உரிமையைப் பெற்றிருந்த போதும் நிரந்தர பதிவு பற்றிய சான்றிதழை பெற வேண்டியிருந்தது. மலையகத் தோட்டங்களில் காணப்பட்ட பெருந்தோட்ட இராச்சிய முறை மற்றும் அக்காலத்தில் மலையக மக்கள் மத்தியில் நிலவிய குறைந்த எழுத்தறிவு அரசியல் பிரக்ஞையின்மை ஆகியன காரணமாக நிரந்தர பதிவுச் சான்றிதழ் பெற்று வாக்குரிமை பெறும் போக்கு மிகக் குறைவாகவே காணப்பட்டது. இது எதிர்பார்க்கக் கூடியதே. இதனால் 1931 ஆம் ஆண்டில் இந்தியர்கள் மொத்தமாக 818,500 பேரும் அதில் மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் 602,000 பேர் இருந்த போதும் சுமார் 100,000 பேர் மட்டுமே மலையக மக்கள் என்ற வகையில் வாக்குரிமை பெற்றிருந்தனர். எனவே குறைவானவர்களே வாக்குரிமைக்கு விண்ணப்பித்து வாக்குரிமை பெற்றிருந்தமை தெளிவு. முதலில் இவ்வாறு குறைவான வாக்காளர்களே மலையகத் தோட்டத் தொழிலாளர்களிடம் காணப்பட்ட போதும் இது பின்னைய காலங்களில் மலையகத்தில் அரசியல் தொழிற் சங்க பிரக்ஞைகளுக்கு ஆதாரமாக அமைந்திருந்தது. மிகவும் முக்கியமாக அவர்கள் தங்களை இலங்கை பிரஜைகள் என்பதனை மேலும் உறுதிப்படுத்துவதற்கான அம்சமாக இது அமைந்திருந்தது.

மலையகத் தமிழரின் அரசியல் தொழிற் சங்க வரலாற்றில் 1931– 1947 காலப் பகுதியானது எழுச்சியான காலமாகும். பிரித்தானியர் மலையக மக்களை பிரஜைகளாக அங்கீகரித்து 1931 டொனமூர் சீர்திருத்தத்தின் மூலம் வாக்குரிமை வழங்கியமை இந்த எழுச்சிக்கான உந்துதலாக அமைந்திருந்தது. 1930கள் ஆகின்ற போது மலையகத் தொழிலாளர்களை அரை அடிமை முறையிலான கங்காணி முறையில் இருந்து விடுவிப்பதற்காகக் கொண்டு வரப்பட்ட சட்டங்கள் அமுலாக்கப்பட்ட நிலையில் கங்காணி முறை வலுவிழந்தமையும் மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் நடேசய்யரின் தொழிற் சங்கப் பணி தொழிற் சங்க செயற்பாடுகளையும் தொழிற் சங்க அடிப்படையிலான அணிதிரள்வையும் சாத்தியப்படுத்தும் சூழலை ஏற்படுத்தி இருந்தன.

3. மலையகத் தமிழரின் பிரஜா உரிமை மறுப்பு

மலையக மக்களுக்கு பிராஜவுரிமை மறுக்கப்பட்ட போது அதற்குக் கடுமையாக எதிர்ப்பைத் தெரிவித்த இடதுசாரிகள் பாராளுமன்றத்திற்கு வெளியில் எந்த எதிர்ப்பு நடவடிக்கையையும் மேற்கொள்ள துணியவில்லை. இ. தொ. காங்கிரஸீம் 1952 ஆம் ஆண்டு வரையில்



பிரஜாவுரிமை பறிப்புக்கு எதிராக அரசியல் தொழிற் சங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. 1952 ஆம் ஆண்டு தேர்தல் திகதி குறிக்கப்பட்ட பின்னரே மலையக மக்களுக்கு பிரஜா உரிமையைப் பெற்றுக் கொடுக்கும் படி கேட்டு தமது சத்தியாக்கிரகப் போராட்டத்தை பிரதமர் அலுவலகம் முன்பாக மேற்கொண்டனர். இந்த சத்தியாகிரகத்திற்கு இடதுசாரித் தலைவர்கள் தமது ஆதரவை வெளிப்படுத்தி இருந்தனர்.

மலையக மக்களின் பிரஜாவுரிமை மீட்பு என்பது சத்தியாகிரக போராட்டத்தோடு நிறுத்தப்பட்டதுடன் அதன் பின்னர் அது இலங்கை இந்திய அரசுகளுக்கு இடைப்பட்ட விவகாரமாகக் கருதப்பட்டு இரு நாடுகளுக்கிடையிலான உடன்படிக்கைகள் மூலம் தீர்க்கப்பட முயற்சிகள் செய்யப்பட்டன. இந்த முயற்சிகள் மலையக மக்களை மேலும் அவலத்திற்கு உட்படுத்தின. 1964 ஆம் ஆண்டு சிறி மா சாஸ்திரி உடன்படிக்கையும் அதன் பின்னர் 1974 இல் செய்யப்பட்ட சிறிமா இந்திரா உடன்படிக்கையும் மேற்கொள்ளப்பட்டன. இந்த உடன்படிக்கை அடிப்படையில் இலங்கையில் பிரஜாவுரிமைக்கு விண்ணப்பித்த மலையக மக்களுக்கு பிரஜா உரிமை வழங்கப்படக் கூடாது என்ற அடிப்படையிலேயே பரிசீலிக்கப்பட்டன.

4. சுதந்திர இலங்கையும் மலையகத் தமிழர் உரிமை மீதான ஒடுக்கு முறைகளும்: 1947 – 1971

1931 ஆம் ஆண்டில் சர்வசன வாக்குரிமை மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்குவது தொடர்பாக இடம்பெற்ற இன வர்க்க கண்ணோட்டத்தின் தொடர்ச்சியினை 1948 இல் பிரஜா உரிமை தொடர்பாக சிங்கள வலதுசாரி தலைவர்களின் நிலைப்பாடுகள் வெளிப்படுத்தி இருந்தன. இடதுசாரி தலைவர்கள் மலையக மக்களின் பிரஜா உரிமையை பறிப்பதில் உள்ள வர்க்க சார்பையும் இனவாதத்தையும் பாராளுமன்றத்தில் அம்பலப்படுத்தினர்.

1948 பிரஜா உரிமை சட்டத்தின் தொடர்ச்சியாக கொண்டு வரப்பட்ட 1949 இந்திய பாகிஸ்தானியர் வதிவிடச் சட்டம் 1949 தேர்தல்கள் திருத்தச் சட்டம் ஆகியன முழு மலையக மக்களின் குடியுரிமையையும் வாக்குரிமையையும் இழக்கச் செய்யும் வகையில் அமைந்திருந்தன. பிரஜா உரிமைச் சட்டங்கள் சிங்களவர்கள் இலங்கைத் தமிழர்கள் இலங்கை முஸ்லிம்கள் ஆகியோருக்கு பரம்பரை அடிப்படையில் தாமாக குடியுரிமை பெற்றுக் கொள்ளும் வகையில் அமைந்திருந்தது. எனினும் மலையக மக்களைப் பொறுத்தவரையில் இலங்கையில் பிறந்த ஒருவர் தான் இலங்கை பிரஜை என்ற தகுதியைப் பெறுவதற்கு தனது தந்தை அல்லது தந்தை வழிப் பாட்டன் இலங்கையில் பிறந்திருப்பதை நிரூபிக்க வேண்டும். குறித்த நபர் இலங்கைக்கு வெளியே பிறந்தவராக இருந்தால் அவரது தந்தையும் தந்தையின் தந்தையும் இலங்கையில் பிறந்தமைக்கான சான்றுகளை சமர்ப்பித்தாக வேண்டும் என்ற ஏற்பாட்டிற்கு உட்பட்டே பிரஜாவுரிமைக்கு விண்ணப்பிக்க முடியும். மலையக மக்களின் பிறப்புச் சான்றிதழே இதற்கான வலிதான சான்றாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. 1895 ஆம் ஆண்டில் இருந்தே இலங்கையில் பிறப்பை பதிவு செய்வதும் பிறப்புச் சான்றிதழ் வழங்கும் முறையும் அமுலுக்கு வந்திருந்த நிலையில் இச் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் ஏறக்குறைய அனைவரும் தமது பிரஜாவுரிமையை முழுமையாக இழந்தனர். இந்தச் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய டீ.எஸ். சேனாநாயக்கவிற்கு குடியுரிமை பெற முடியாது என இடதுசாரி தலைவர் பீட்டர் கெனமன் அப்போது சுட்டிக்காட்டியமை குறிப்பிடத்தக்கது. பிரஜா உரிமையை அடிப்படையாகக் கொண்டு திருத்தப்பட்ட 1949 தேர்தல் திருத்தச் சட்டத்தின் மூலம் வாக்குரிமையும் பறிக்கப்பட்டது.


1920–1940 காலப் பகுதிகளில் இலங்கையை தமது சொந்த நாடாக கருதி மலையக மக்கள் வாழ்ந்து வந்திருந்தனர். 1927 இல் டொனமூர் குழுவினர் 40% 60% இடைப்பட்ட மக்கள் இலங்கையை தமது சொந்த நாடாக கருதி வாழ ஆரம்பித்து விட்டனர் என்று அறிக்கையிட்டிருந்த அதேவேளை 1938 இல் ஜெக்சன் குழுவினர் அது 60% என்று அறிக்கையிட 1946 இல் சோல்பரி குழுவினர் 80% என குறிப்பிட்டிருந்த நிலையிலேயே இந்தச் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டு மலையக மக்கள் நாடற்றவர்களாக ஆக்கப்பட்டனர்.

5. இலங்கையில் மலையக மக்களின் அரசியல் மற்றும் சிவில் உரிமைகள் 1940ம் ஆண்டு செப்டெம்பர் 7ம், 8ம் திகதிகளில் கம்பளையில் 'நேரு நகர்' பந்தலில் நடைபெற்ற விழாவில் மலையக மக்களின் உரிமைகளை வென்றெடுக்கவும்இ நிலைநாட்டவும் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் கங்கணம் கட்டிக்கொண்டதாக வரலாறு புகழ்கின்றது. இதுவே மலையக மக்களுக்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்து தொழிற்சங்க பாதையில் உத்வேகத்துடன் போராட எடுத்த ஆரம்ப கட்டமாகும். இதைத் தொடர்ந்து இவரது வாழ்க்கை வரலாறு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஸ்தாபனத்துடன் பின்னிப் பிணைந்து இருந்தது.

11ஆம் பக்கம் பார்க்க...



# பிராந்தியச் செய்திகள்



## நெத்தலி, கருவாடு உள்ளிட்ட சில பொருட்களுக்கு விசேட வரி!

நெத்தலி, கருவாடு உள்ளிட்ட சில பொருட்களுக்கு விசேட வரி விதிக்கப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தல் நிதி அமைச்சரினால் வெளியிடப்பட்டுள்ளது.

2007ஆம் ஆண்டு 48ஆம் இலக்க விசேட பொருட்கள் வரி சட்டத்தின் பிரகாரம் இவ்வாறு வரி விதிக்கப்பட்டுள்ளது.

இதன்படி ஒரு கிலோ கருவாடு மற்றும் நெத்தலி ஆகியவற்றுக்கு 100 ரூபாய் வரியும் வெந்தயம் ஒரு கிலோ கிராமுக்கு 50 ரூபாய் வரியும் குரக்கன் மா ஒரு கிலோவிற்கு 150 ரூபாய் வரியும் விதிக்கப்பட்டுள்ளது.

மேலும் கடுகு ஒரு கிலோ கிராமுக்கு 62 ரூபாய் வரியும் உப்பு ஒரு கிலோ கிராமுக்கு 40 ரூபாய் வரியும் பட்டர் ஒரு கிலோ கிராமுக்கு 880 ரூபாய் வரியும் விதிக்கப்பட்டுள்ளது.

ஓகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி முதல் எதிர்வரும் ஒரு வருடத்துக்கு அமுலாகும் வகையில் குறித்த வரி விதிக்கப்பட்டுள்ளது என நிதி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

## மாகாணங்களுக்கு இடையிலான பொதுப் போக்குவரத்து முழுமையாக இடைநிறுத்தம்

மாகாணங்களுக்கு இடையிலான பொதுப் போக்குவரத்து, அன்று (வெள்ளிக்கிழமை) நள்ளிரவு முதல் இரண்டு வாரங்களுக்கு முழுமையாக இடைநிறுத்தப்படும் என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இதேவேளை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 15 ஆம் திகதிக்கு பின்னர், தடுப்பூசி அட்டையின்றி பொது இடங்களில் பிரவேசிப்பதற்கும் பொதுமக்களுக்கு முழுமையாக தடை விதிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தல் அதிகரித்து வருகின்றமையினால், நடைமுறையிலுள்ள சுகாதார வழிகாட்டல்கள் மேலும் இறுக்கமாக நடைமுறைப்படுத்தப்படுமெனவும் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா கூறியுள்ளார்.

## யாழ்ப்பாணத்தில் சடலங்களை தகனம் செய்வதில் சிக்கல்!

கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழந்தவர்களின் சடலங்களை தகனம் செய்வதில் பிரச்சினைகளை எதிர்நோக்குவதாக யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் ஸ்ரீபவானந்தராஜா தெரிவித்துள்ளார். அன்று (வெள்ளிக்கிழமை) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் ஸ்ரீபவானந்தராஜா மேலும் கூறியுள்ளதாவது, "கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழந்தவர்களின் சடலங்களை தகனம் செய்வதில் சில பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளோம்.

யாழ்ப்பாணத்தை பொறுத்தவரை கோம்பயன்மணல் இந்து மயானத்தில் மாத்திரமே மின்சாரம் ஊடாக சடலங்களை தகனம் செய்யும் வசதி இருக்கின்றது. அதாவது ஒரு நாளைக்கு நான்கு பேரை மாத்திரமே மின்தகனம் செய்யக்கூடிய வசதி இருக்கின்றது.

மேலும், யாழ்.போதனா வைத்தியசாலையிலும் சரி ஏனைய வைத்தியசாலைகளிலும் சரி கொரோனாவினால் உயிரிழப்பவர்களை அங்குதான் கொண்டு செல்ல வேண்டிய தேவை காணப்படுகின்றது. கடந்த ஐந்து மாதங்களில் யாழ்.போதனா வைத்தியசாலையில் 140 பேரும் ஏனைய வைத்தியசாலைகளில் 16 பேருமாக மொத்தமாக 156 பேரை மின்தகனத்திற்கு அனுப்ப வேண்டி இருந்தபடியால் இன்னும் பல பேரின் சடலங்கள் தேங்கி இருக்கின்றன" என அவர் குறிப்பிட்டுள்ளார்.



### செஞ்சோலை படுகொலை தினத்தின் 15 ஆம் ஆண்டு நினைவேந்தல் படுகொலை நடந்த இடத்தில் அஞ்சலி செலுத்த தடை

செஞ்சோலை படுகொலை தினத்தின் 15 ஆம் ஆண்டு நினைவேந்தல் தினம் இன்றாகும்.

எனினும் படுகொலை நடந்த இடத்தில் இறந்த பிள்ளைகளுக்கு அஞ்சலி செலுத்த, பெற்றோருக்கு இராணுவத்தினரும் பொலிஸாரும் தடை விதித்துள்ளனர்.

மேலும் முல்லைத்தீவு- வள்ளிபுனம் பகுதியிலுள்ள செஞ்சோலை பகுதியில் பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் புலனாய்வுத்துறையினர் உள்ளிட்ட பலரும் பலத்த பாதுகாப்பில் ஈடுபட்டுள்ளனர்.



இந்நிலையில் அன்று (சனிக்கிழமை) காலை, உயிரிழந்த மாணவிகளின் பெற்றோர் சிலர், அங்கு வருகை தந்திருந்த போதிலும், பொலிஸாரும் இராணுவத்தினரும் அந்த வளாகத்திற்குள் செல்வதற்கு அவர்களுக்கு அனுமதி வழங்கவில்லை.

குறித்த சம்பவம் தொடர்பாக உயிரிழந்த மாணவிகளின் பெற்றோர்கள் தெரிவித்துள்ளதாவது, "எங்களது பிள்ளைகள் உயிரிழந்த இடத்தில் தனித்தனியாகச் சென்று கூட அஞ்சலி செலுத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய நிலைமை எதிர்வரும் காலங்களில் இருக்க கூடாது. அடுத்த வருடமாவது, எங்களது பிள்ளைகளுக்கு அஞ்சலி செலுத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்" என அவர்கள் தங்களது ஆதங்கத்தினை வெளிப்படுத்தினர்.

கடந்த 2006ஆம் ஆண்டு ஓகஸ்ட் 14ஆம் திகதி, முல்லைத்தீவு- வள்ளிபுனம் பகுதியிலுள்ள செஞ்சோலை சிறுவர் இல்ல வளாகம் மீது விமானப் படை நடத்திய தாக்குதலில் 54 மாணவிகள் உட்பட 61 பேர் கொல்லப்பட்டனர். 129இற்கும் அதிகமான மாணவிகள் அவயவங்களை இழந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஆட்பதிவு திணைக்களத்தின் அனைத்து செயற்பாடுகளும் இடைநிறுத்தம் !

ஆட்பதிவு திணைக்களத்தின் அனைத்து செயற்பாடுகளும் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளன.





திணைக்களத்தில் பணியாற்றும் ஊழியர்கள் பலருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதை அடுத்தே இந்த முடிவு எட்டப்பட்டதாக அத்திணைக்களத்தின் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் வியானி குணதிலக்க தெரிவித்துள்ளார்.

இருப்பினும், தேசிய அடையாள அட்டைகளுக்கு விண்ணப்பங்களை சமர்ப்பித்தவர்களுக்கு அஞ்சல் முகவரிகள் மூலம் அடையாள அட்டைகள் அனுப்பிவைக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதற்கிடையில் பொதுப் பரீட்சை, நேர்முகப்பரீட்சை மற்றும் கடவுச்சீட்டு போன்ற அவசர தேவைகளுக்கு அடையாள அட்டையை பெற்றுக்கொள்பவர்களுக்கு விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். இது தொடர்பான மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ள info@drp.lk என்ற மின்னஞ்சல் முகவரி அல்லது தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்புகொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

## மட்டக்களப்பில் சுமார் 8 ஏக்கர் பகுதி அழிக்கப்பட்டு நில ஆக்கிரமிப்பு நடவடிக்கை

மட்டக்களப்பு- காராமுனை பகுதியிலுள்ள வனத்தில் மரங்களை வெட்டி தீயிட்டு, சுமார் 8 ஏக்கர் பகுதி அழிக்கப்பட்டு, நில ஆக்கிரமிப்பு நடவடிக்கையொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளதாக மக்கள் குறிப்பிட்டுள்ளனர்.



வாகனேரி வனப்பகுதியிலுள்ள காரமுனை கிராமத்துக்கு முன்னால் உள்ள இந்த காட்டை, கடந்த சில தினங்களுக்கு முன்னர் சிலர் ஊடுருவி, அங்கிருக்கும் பழமைவாய்ந்த மரங்களை வெட்டி, விழ்த்தி தீயிட்டு எரித்துள்ளனர்.

இதனால் சுமார் 8 ஏக்கர் காடு அழிக்கப்பட்டுள்ளது. ஆகவே இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களை கண்டுபிடித்து, அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கையை உரிய அதிகாரிகள் முன்னெக்க வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.




## விஜய் படத்தில் இணையும் சிவகார்த்திகேயன்?

'பீஸ்ட்' படத்தின் முதற்கட்ட படப்பிடிப்பு ஜார்ஜியாவில் நடந்தது. தற்போது அடுத்தகட்ட படப்பிடிப்பு சென்னையில் நடைபெற்று வருகிறது.

கோலமாவு கோகிலா, டாக்டர் ஆகிய படங்களை இயக்கிய நெல்சன், தற்போது விஜய் நடிக்கும் 'பீஸ்ட்' படத்தை இயக்கி வருகிறார். இப்படத்தில் விஜய்க்கு ஜோடியாக பூஜா ஹெக்டேவும், வில்லனாக செல்வராகவனும் நடிக்கின்றனர். சன் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரிக்கும் இப்படத்திற்கு அனிருத் இசையமைக்கிறார். இப்படத்தின் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், இப்படத்தில் நடிகர் சிவகார்த்திகேயன் இணைந்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. அவர் 'பீஸ்ட்' படத்தில் இடம்பெறும் ஒரு பாடலை எழுதுவதோடு, அவரே பாடவும் உள்ளாராம்.

ஏற்கனவே நெல்சன் இயக்கிய கோலமாவு கோகிலா படத்தில் 'கல்யாண வயசு' பாடல், டாக்டர் படத்தில் 'செல்லம்மா', 'சோ பேபி' ஆகிய பாடல்களின் வரிகளை சிவகார்த்திகேயன் எழுதியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தப் பாடல்களுக்கு ரசிகர்களிடையே நல்ல வரவேற்பு கிடைத்தது. ஆகையால், நெல்சன் அடுத்ததாக இயக்கும் பீஸ்ட் படத்திற்கும் சிவகார்த்திகேயன் பாடல் வரிகளை எழுத உள்ளாராம். விரைவில் இதுகுறித்த அறிவிப்பு வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.



## ஷங்கர் படத்தில் அஞ்சலி?

ஷங்கர் - ராம்சரண் கூட்டணியில் உருவாக உள்ள புதிய படத்தின் படப்பிடிப்பு அடுத்த மாதம் ஐதராபாத்தில் தொடங்க உள்ளது.

தமிழில் 'கற்றது தமிழ்' படம் மூலம் அறிமுகமான அஞ்சலி, இதையடுத்து அங்காடி தெரு, எங்கேயும் எப்போதும், கலகலப்பு, சேட்டை உள்ளிட்ட பல வெற்றி படங்களில் நடித்து முன்னணி நடிகையாக உயர்ந்தார்.

சமீப காலமாக தமிழில் பட வாய்ப்புகள் சரிவர அமையாததால் தெலுங்கு, கன்னடம், மலை யாளம் போன்ற பிற மொழி படங்களில் கவனம் செலுத்தி வருகிறார். அண்மையில் தெலுங்கில் அவர் நடித்த 'வக்கீல் சாப்' திரைப்படம் நல்ல வரவேற்பை பெற்றது.

இந்நிலையில், ஷங்கர் - ராம்சரண் கூட்டணியில் தமிழ், தெலுங்கு, இந்தி ஆகிய மூன்று மொ ழிகளில் தயாராகும் படத்தில் நடிகை அஞ்சலி முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்க ஒப்பந்தமாகி உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

இப்படத்தில் ராம்சரணுக்கு ஜோடியாக நடிக்க பாலிவுட் நடிகை கியாரா அத்வானி ஏற்கனவே ஒப்பந்தமாகி உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இப்படத்தின் படப்பிடிப்பு அடுத்த மாதம் ஐதராபாத்தில் தொடங்க உள்ளது.



## 'குக் வித் கோமாளி' அஸ்வின் நடிக்கும் வெப் தொடரில் 6 ஹீரோயின்கள்

குக் வித் கோமாளி' மூலம் பிரபலமான அஸ்வின், தீப்தி இயக்கி இருக்கும் வெப் தொடர் மூலம் தெலுங்கில் அறிமுகமாகி உள்ளார்.

குக் வித் கோமாளி நிகழ்ச்சியின் இரண்டாவது சீசனில் போட்டியாளராக கலந்துகொண்டு பிரபலமானவர் அஸ்வின். இவருக்கு தற்போது பட வாய்ப்புகள் குவிந்து வருகிறது. தமிழில் பிசியாக நடித்து வரும் இவர், சைலன்டாக தெலுங்கிலும் ஒரு வெப் தொடரில் நடித்து முடித்துள்ளாராம். 'மீட் கியூட்' என பெயரிடப்பட்டுள்ள இந்த வெப் தொடரை பிரபல தெலுங்கு நடிகர் நானி தயாரித்துள்ளார்.

இந்த வெப் தொடரில் சுனைனா, அடா சர்மா, அகன்ஷா சிங், ருஹானி சர்மா, சஞ்சிதா, வர்ஷா பொல்லம்மா ஆகிய 6 ஹீரோயின்கள் நடித்துள்ளார்களாம். மேலும் இதில் நடிகர் சத்யராஜும், நடிகை ரேவதியும் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். இந்த வெப் தொடரை நடிகர் நானியின் சகோதரி தீப்தி இயக்கி உள்ளார்.



## "புட்ட பொம்மா" திரைப்படத்தின் மூலம் ஹீரோயினாகும் அனிகா!



'புட்ட பொம்மா' திரைப்படத்தின் மூலம் நடிகை அனிகா கதாநாயகியாக அறிமுகமாகவுள்ளார்.

மலையாளத்தில் வெளியாகி வெற்றி பெற்ற 'கப்பேலா' திரைப்படத்தின் தெலுங்கு ரீமேக்காக புட்ட பொம்மா திரைப்படம் அமையவுள்ளது.

கவுதம் மேனன் இயக்கத்தில் அஜித் நடித்த என்னை அறிந்தால் திரைபடத்தில் அனிகா குழந்தை நட்சத்திரமாக அறிமுகமாக பல திரைப்படங்களில் நடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**தொகுப்பு :– ஹாசினி**




## இயற்கையான முறையில் முகத்தை பளபளக்க செய்யும் அழகு குறிப்புகள்

வைட்டமின் E மாத்திரைகளை வாங்கி, அதனுள் இருக்கும் எண்ணெயை எடுத்து முகச்சுருக்கங்களில் தடவி மாசாஜ் செய்து வந்தால், சுருக்கங்கள் மறைந்து முகம் அழகாக இருக்கும்.

சோப்புக் குளியல்தான் முழுமையான குளியல் என்றில்லை. கடலைமாவை எலுமிச்சம் பழச்சாறில் குழைத்து, சோப்புக்குப் பதில் உபயோகிக்கலாம். இதேபோன்று, கோதுமைத் தவிட்டையும் உபயோகிக்கலாம். இதனால், சருமத்தில் உள்ள இறந்த செல்கள் எளிதாக உதிர்ந்து தேகம் புத்துணர்வு பெறும்.

நெல்லிக்காய்களின் கொட்டைகளை எடுத்துவிட்டு, எலுமிச்சம் பழச்சாறு விட்டு அம்மியில் வைத்து அரைத்து, மாதம் ஒரு தடவை தலையில் தேய்த்துக் குளித்து வந்தால், முடி உதிர்வது நின்றுவிடும். இளநரை இருந்தாலும், சில நாட்களில் மறைய ஆரம்பிக்கும்.

நான்கு நாட்களுக்கு ஒருமுறை நீராவியில் முகத்தைக் காட்டினால், முகத்தின் நுண்ணிய வியர்வைத் துவாரங்களில் உள்ளஅழுக்குகள் வெளியேறும். பருக்கள் வராது.

சிலருக்கு முன் மற்றும் பின் கழுத்து கருமையாகக் காணப்படும். இதைப் போக்க நாட்டுமருந்துக் கடைகளில் கிடைக்கும் பீர்க்கங்காய் கூடு வாங்கி வைத்துக் கொள்ளுங்கள். குளிக்கும் போது கழுத்தில் நன்கு சோப்பு தடவி பீர்க்கங்காய் கூடால் நன்கு தேய்த்து வந்தால் நாளடைவில் கறுப்பு நிறம் மாறி இயற்கையான நிறம் வந்துவிடும்.

வேப்பிலையை தண்ணீருடன் சேர்த்துக் கொதிக்க வைத்து அந்த நீரில் முகம் கழுவி வந்தால் முகம் பளபளப்பு அடையும். முக அழகைக் கொடுக்கும் தேமலை அகற்ற எலுமிச்சம் பழச்சாறுடன் துளசி இலைச்சாறைச் சேர்த்துத் தடவி வரவேண்டும்.

முகத்துக்கு மேக்கப் போடுவதற்குமுன் லேசாக முகம் முழுவதும் பன்னீரைத் தடவினால், சருமம் மென்மையாக இருக்கும். நீண்ட நேரம் மேக்கப் கலையாமலும் இருக்கும்.

உப்பு கலந்த எலுமிச்சம்பழச் சாறை பற்களில் தேய்த்தால், பற்களில் உள்ள கறை மறையும், ஈறுகளில் உள்ள கறை மறையும். ஈறுகள் பலம் பெறும்.

## கொண்டைக்கடலை சாப்பிடுவதால் கிடைக்கும் நன்மைகள்

கொண்டைக்கடலையில் ஊட்டச்சத்துக்கள் நிறைந்துள்ளது. நோயெதிர்ப்பு சக்தி மற்றும் ஆற்றலை அதிகரிக்கும். கொண்டைக்கடலையில் மாங்கனீசு, தையமின், மக்னீசியம், பாஸ்பரஸ் போன்ற பல கனிமச்சத்துக்கள் நிறைந்துள்ளது. இவை உடலின் ஆற்றலை அதிகரிக்கதோடு, நோயெதிர்ப்பு சக்தியையும் அதிகரிக்கும்.

கொண்டைக்கடலையில் கிளைசீமிக் இன்டெக்ஸ் குறைவாக உள்ளதால், இது நீரிழிவு நோயாளிகளுக்கு மிகவும் நல்லது. மேலும் இதில் கரையும் நார்ச்சத்துக்கள், அதிகப்படியான புரோட்டீன், இரும்புச்சத்து போன்றவை இருக்கிறது. அதனால் இரத்த சர்க்கரை அளவை கட்டுப்பாட்டுடன் வைக்க இவை உதவி செய்கிறது.



ஹார்மோன் ஏற்றத்தாழ்வைத் தடுக்கும். கொண்டைக்கடலை சாப்பிட்டு வந்தால், பெண்களை அதிகம் தாக்கும் மார்பக புற்றுநோய், ஆஸ்டியோபோரோசிஸ் போன்றவற்றை எதிர்த்துப் போராடும். மேலும் மாதவிடாய் காலத்தில் பெண்களுக்கு ஏற்படும் மனநிலை மாற்றத்தை சரிசெய்யவும் உதவும்.

இரத்த சோகை இரத்த சோகைக்கு சிறந்த உணவுப் பொருள். ஏனெனில் இதிலும் இரும்புச்சத்து அதிகம் உள்ளது. இரத்த அழுத்தம் அதிகம் உள்ளவர்கள் கொண்டைக்கடலை சாப்பிட்டு வர, இரத்த அழுத்தம் கட்டுப்பாட்டுடன் இருக்கும். இதற்கு அதில் உள்ள பொட்டாசியம் மற்றும் மக்னீசியம் தான் காரணம்.

கொண்டைக்கடலையை அவித்து அரைத்து பாலில் கலந்து சாப்பிட்டு வர உடலுக்கு உறுதியை கொடுக்கும். கொண்டைக்கடலையில் உள்ள மக்னீசியம் மற்றும் ஃபோலேட் போன்றவை இரத்த நாளங்களை வலிமையடையச் செய்து, கெட்ட கொலஸ்ட்ராலை குறைத்து, இதயத்தை ஆரோக்கியமாக செயல்பட உதவும்.

வாத நோய் உள்ளவர்கள், மூல நோய் உள்ளவர்கள், மலச்சிக்கல் உள்ளவர்கள் கொண்டைக் கடலையை தவிர்ப்பது நல்லது. இதனை அளவுக்கு அதிகமாக உட்கொள்வது உடலுக்கு கெடுதலை உண்டாக்கும். எனவே இதனை அளவோடு பயன்படுத்துவது நல்லது.



**எல்லோர் வாழ்விலும்**
**சொல்லமுடியாத ஒரு**
**ரகசியம்**
**மாற்றமுடியாத ஒரு**
**பிழை**
**அடைய முடியாத ஒரு**
**கனவு**
**மறக்க முடியாத ஒரு**
**காதல்**
**இருக்கத்தான் செய்யும்**

**விலகிவிட**
**வேண்டுமென்று**
**முடிவுசெய்தபின்**
**காரணங்கள்**
**தேவையில்லை**
**ஏனென்றால்**
**அதற்கான**
**காரணங்களில்**
**ஒருபக்க நியாயம்**
**மட்டுமே இருக்கும்**



**தொகுப்பு :– ஹாசினி**

07ஆம் பக்க தொடர்ச்சி...

இவருடைய தலைமையில் மலையகம் எழுச்சி கண்டது. இந்திய சமுதாயத்தினருக்கு விசேடமாக தோட்டப்புற மக்களுக்கு பிரஜாவுரிமை, வாக்குரிமை போன்ற அடிப்படை உரிமைகள் பெறப்பட்டன. இந்திய சமுதாயத்தினர் "நாடற்றவர்" என்ற பதத்தில் இருந்து விடுபட்டனர். மலையகம் படிப்படியாக இருளை விட்டு நீங்க வழி பிறந்தது.

இவர் இந்திய வம்சாவளி மக்களுக்காக முன்னெடுத்த போராட்டங்கள் பலவாகும். இந்நாட்டின் முதுகெலும்பாய் உழைத்த தோட்டப்புற மக்களுக்கு பிரஜாவுரிமை மற்றும் வாக்குரிமை வழங்காமையை எதிர்த்து தொடர்ச்சியாக நடத்திய போராட்டங்கள் வரலாறு படைத்தவையாகும்.

1952ம் ஆண்டு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் 7 பாராளுமன்ற உறுப்பினர்களுடன் நடாத்திய மூன்று மாத சத்தியாக்கிரக போராட்டம் அன்றிருந்த அரசாங்கத்தின் கவனத்தை வெகுவாக ஈர்த்தது. 1958ம் பிரஜாவுரிமை சட்டத்தின் பிரகாரம் பிரஜாவுரிமை பெற்றவர்களைத் தவிர ஏனைய "நாட்டற்றவர்களாக" கருதப்பட்ட இந்திய வம்சாவளியினருக்கு பிரஜாவுரிமை வழங்கும் விசேட சட்டம் 1988 நவம்பர் 9ம் திகதி நிறைவேற்றப்பட்ட சட்ட மூலமாகவே வழங்கப்பட்டது. இதனால் நாற்பது வருடங்களாக அரசியல் இழுபறிகளால் தீர்வு காணாத பெரும் பிரச்சினை தீர்ந்தது. இது அமரர் தொண்டமானின் சிறந்த தலைமைத்துவத்திற்கும், அரசியல் சாணக்கியத்திற்கும், விடாமுயற்சிக்கும், போராட்டத்திற்கும் மகுடமாய் விளங்கியது.

இதைத் தொடர்ந்து 1989 ஏப்ரல் 26ம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட "வாக்குரிமை வழங்குவதற்கான திருத்தச்சட்டம்" புதிதாக பிரஜாவுரிமை பெற்ற இந்திய வம்சாவளியினரை தம்மை வாக்காளர்களாக பதிவு செய்ய கொண்டு வரப்பட்ட சட்டமாகும். இந்த சட்டமூலத்தினாலேயே இந்திய சமுதாயத்தினர் விசேடமாக தோட்டப்புறமக்கள் இன்றுவாக்குரிமை பெற்று ஏனைய சமூகத்தோடு அரசியல் நீரோட்டத்தில் பங்குபற்றுகின்றனர். இதுவே இம்மக்கள் இன்று பாராளுமன்றத்திலும், மாகாண சபைகளிலும், பிரதேச சபைகளிலும் ஏனைய உள்ளூராட்சி சபைகளிலும் அரசியல் பிரவேசம் செய்ய வழிவகுத்து இருக்கின்றது. இதுவும் அமரர் தொண்டமான் எடுத்த போராட்ட கோர்வையின் பயன் ஆகும்.

இந்த இரண்டு சாதனைகளால் தான் இன்று இந்திய வம்சாவளி மக்கள் ஏனைய சமூகத்தோடு அரசியலிலும் ஏனைய துறைகளிலும் பங்குகொள்ள சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது.

ஸ்ரீபாத கல்வியற் கல்லூரியில் தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு 75% வீதம் இட ஒதுக்கீடு கேட்டு அமைச்சரவை அங்கீகாரம் பெற்றவர் அமைச்சர் சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களேயாவார். அன்னார் தொழிற்சங்கவாதியாகவும், பாராளுமன்ற உறுப்பினராகவும், அமைச்சராகவும் இருக்கும்பொழுது சகல சமூகத்தினரின் நன் மதிப்பையும் பெற்றிருந்தார். எனவே தான் இ. தொ. கா. வில் பெரும்பான்மை சமூகத்தினரும் அங்கத்தவர்கள் ஆனார்கள். இன்றும் ஏராளமானோர் இருக்கின்றனர்.

இன ஒற்றுமையையும், தேசிய ஒற்றுமையையும் அன்னார் எப்பொழுதுமே அடிப்படைக் கொள்கையாகவே ஏற்றிருந்தார். எனவே தான் அவர் மறைவு இந்த நாட்டிற்கும் சர்வதேசத்திற்கும் ஒரு பேரிழப்பானது சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றம், நலிவுற்ற பின் தங்கிய மக்கள் பயன்படும் வகையில் பல்வேறு சுய தொழில் உதவி திட்டங்களையும், பல்கலைக்கழக மாணவர்களுக்கு நிதி உதவி திட்டங்களையும், தொழில் பயிற்சித் திட்டங்களையும், கலை, கலாசார திட்டங்களையும் அமுல் நடத்துகின்றது. இதனால் தோட்டப்புற இளைஞர்கள் பெரிதும் பலன் அடைந்து தொழில் வாய்ப்பை பெற்றுள்ளனர்.



6.மலையக தமிழரின் கல்வி உரிமையில் அரசின் தாக்கம்

கோளமயம் இன்று முக்கியத்துவம் பெற்றுள்ளதுடன் சமுதாயத்தின் கல்வி, அரசியல், பொருளாதாரம் பற்றிய மீள் சிந்தனை யாக்கத்திற்கு வித்திட்டுள்ளது. அன்றைய மலையகத்துடன் இன்றைய மலையகத்தை ஒப்பிடும் போது அதன் மாற்றங்களை எம்மால் உணர்ந்து கொள்ளக்கூடியதாக இருக்கும்.

மலையக சமூகம் புறக்கணிக்கப்படா மல் இருக்க வேண்டுமாயின் எதிர்கால சந்ததியினருக்கான கல்வி வழங்கலை விரிவாக்கம் செய்யப்பட வேண்டியது அவசியமாகும்.

மலையக மக்களுக்கு கிடைக்க வேண்டிய அடிப்படை உரிமையான இலவசக் கல்வி பல போராட்டங்களுக்கு மத்தியிலேயே கிடைக்கப்பெற்றது. எனினும் இக்கல்வி உரிமை முழுமையடையாத நிலையில் ஏனைய உரிமைகளை அனுபவிப்பது தொடர்பான தெளிவின்மை காரணமாகவே தொழிலாளர்கள் புறக்கணிக்கப்படுகின்றார்கள். சமூக, பொருளாதார அரசியல், கலாசார ரீதியான புறக்கணிப்புகளிலிருந்து தொழிலாளர்கள் விடுபட வேண்டுமாயின் கல்விச் சிந்தனை ஒன்றின் மூலமே மாற்ற முடியும்.

இக்கல்வியைப் பெறுவதிலும், வழங்குவதிலும் மலையகத்தில் பல்வேறு சிக்கல்கள் காணப்படுகின்றன. சமுதாயத்தின் மீதான அக்கறை இன்மை, பாடசாலை களில் புதிதாக மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்காக பெற்றோரி டம் பெருமளவு நிதி அறவிடப்படுவது, அதிபர், ஆசிரியர்கள் மற்றும் வளப் பற்றாக்குறை, மாணவர்களின் இடை விலகல், என கல்வியில் பின்னடைவதற்கான பட்டியல் நீண்டு செல்கிறது.

இந்நிலையில் மலையக பட்டதாரி மாணவர் ஒன்றியம் க. பொ. த. (உ/த) பரீட்சைக்கு தோற்றவுள்ள மலையக மாணவர்களுக்கு இலவச கருத்தரங்கு களை நடத்த முன் வந்திருக்கிறது. இ. தொ. காவின் நிதியுதவி மற்றும் நுவரெலியா, பதுளை, இரத்தினபுரி, கேகாலை, மாத்தளை, கண்டி ஆகிய மாவட்டங்களில் பல்கலைக்கழக பட்டதாரிகளின் விரிவுரைகளுடன் இலவசக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன

7.மலையகத்தமிழர் உரிமைகளை அரசு பேணினாலும் இன்றைய போக்குப் பற்றிய ஒரு விமர்சன பார்வை.

இலங்கையில் அரை அடிமை தொழிலாளர்களாகவும் கூலித் தொழிலாளர்களாகவும் மலையக மக்கள் முதலாளித்துவ பொருளாதார முறைக்கு தேவையான மூலதனத் திரட்சியை உருவாக்குவதற்குப் பங்களித்துள்ளனர். 1970 கள் வரை இலங்கையின் பொருளாதாரம் பெருந்தோட்டப் பொருளாதாரத்தில் தங்கி இருந்தது. இவ்வாறான பங்களிப்பை மலையக மக்கள் வழங்கிய போதும் அவர்களின் உரிமைகள் இலங்கை அரசாங்கங்களினால் பறிக்கப்பட்டு அவர்களை திட்டமிட்ட ஒடுக்குமுறைக்கு உட்படுத்தி வந்தனர். காலனித்துவ காலத்தில் இருந்து இன்று வரையும் மிதமிஞ்சிய சுரண்டலுக்கு உட்படுவதை உறுதி செய்த அதே வேளை அரசியல் சமூக உரிமைகளையும் மறுத்து ஓரங்கட்டப்பட்டமையின் விளைவு இலங்கையின் ஏனைய இனப்பிரஜைகளை விட சமூக பொருளாதார அடைவுகளில் இவர்கள் மிகவும் தாழ்ந்த நிலையில் இருக்கின்றனர்.

மலையகத்தில் நிலவிய தொழிற்சங்க அரசியல் பாராளுமன்ற அரசாங்கத்துடனான அபிவிருத்தி அரசியல் என்ற அத்தனை அரசியலும் அதற்கு தலைமை தாங்கிய தாங்கி வருகின்ற தலைவர்களும் மலையகத்தில் உள்ள ஒரு இனப் பிரஜையின் முகவரி வீடு காணி உரிமைகளையேனும் இதுவரை பெற்றுக் கொடுக்க முடியவில்லை.

பெருந்தோட்டத் தொழிலாளர்கள் இன்றும் நாட் சம்பளத்திற்கு பணிபுரிகின்றனர். தோட்டத் தொழிலாளர்களுக்கான கல்வி சுகாதாரம்,போக்குவரத்து வீட்டு வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் மிகக் குறைந்த மட்டத்திலேயே காணப்படுகின்றன. அவர்களது வாழ்க்கைத் தரம் நாட்டின் ஏனைய பொது மக்களது வாழ்க்கைத் தரத்தையும் விட கீழ் மட்டத்திற்கு தள்ளப்பட்டுள்ளது. சுகாதார வசதிகள் வாழ்வதற்குத் தகுதியற்ற முறையில் காணப்படுவதோடு காலசாரம் மற்றும் வாழ்க்கை முறை மாத்திரமன்றி குடும்ப உறவுகளைக் கூட நெருக்கடிக்குள் தள்ளும் "லைன் காம்பரா" எனும் குடியிருப்புக்குள்ளேயே வைக்கப்பட்டுள்ளனர். தோட்டத் தொழிலாளர் மத்தியில் வறுமை வீதம் 32 % ஆக இருப்பதோடு முழு இலங்கையினதும் வறுமை வீதம் 15.2% க்கும் குறைவாக உள்ளது. தோட்ட மக்கள் தொகையில் 49.2% நாளொன்றுக்குத் தேவையான கலோரி தேவையான அளவு கிடைக்காததோடு அதன் விளைவாக தோட்டப் பகுதிகளைச் சேர்ந்த பெண்களின் ஆரோக்கியம் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. பிறந்து 28 நாட்களுக்குள் மரணிக்கும் குழந்தைகளின் விகிதாசாரம் நாட்டின் பொதுவான வீத ஆயிரத்துக்கு 13.9 ஆக இருக்கும் போது தோட்டப் பகுதிகளில் அது 31 ஆக இருக்கிறது.

5 வயதுக்கும் குறைவான பிள்ளைகளின் மரண விகிதாசாரம் ஆயிரத்துக்கு 51.6 % தோட்டப் பகுதிகளில் பிறக்கும் பிள்ளைகளின் வளர்ச்சிக்குன்றல் நகர்ப்புற பிள்ளைகளைவிட மூன்று மடங்காகும். இன்று மலையக மக்கள் தோட்ட வைத்தியசாலையை நம்பி இருக்கின்ற நிலையில் அவைகளின் சேவை மிகவும் தாழ்ந்த நிலையிலேயே உள்ளன. 1970 களில் பின்னர் படிப்படியாக அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்ட தோட்டப் பாடசாலைகளின் கல்வித் தரம் மற்றும் வளங்கள் விநியோகம் நாட்டின் தேசிய மட்டத்துடன் ஒப்பிடுகையில் மிகவும் தாழ்ந்த நிலையிலேயே உள்ளது.

பாடசாலை இடைவிலகல் முக்கியப் பிரச்சினையாக உள்ளது. 5 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பாடசாலையை விட்டு வெளியேறும் பிள்ளைகளின் விகிதாசாரம் 8.4% ஆகும். கிராமம் மற்றும் நகரத்தைக் காட்டிலும் மிகவும் பின்தங்கிய சமூக,பொருளாதார நிலைமைகளி லேயே மலையக மக்கள் வாழ்ந்து வருகின்றனர்

நெற்றிபொறியன்

# ஆகஸ்ட் 12: உலக யானைகள் தினம்



Moeritherium ஏறத்தாழ 300 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பே தோன்றிவிட்ட ஒரு இனம். பல முறை பரிணாம வளர்ச்சி அடைந்து, இன்று உலகத்தில் இன்னும் குறிப்பாக இந்த அகண்ட நிலப்பரப்பில் வாழும் ஒரு மிக பெரிய இனம். அந்த பிரம்மாண்ட உயிரினம் தான் யானைகள்.

ஆப்பிரிக்க சவானா யானைகள், ஆப்பிரிக்க காட்டு யானைகள், ஆசிய யானைகள் என்று மூன்று வித யானைகள் இந்த உலகில் நம்மோடு வசிக்கின்றன. சராசரியாக 9 அடியில் இருந்து சுமார் 15அடி வரை வளரக்கூடிய இந்த பிரமாண்ட உயிரினங்கள் ஏறத்தாழ 7500 கிலோ வரை எடை இருக்கும்.

"யானைக்கும் அடி சறுக்கும் என்பது பழமொழி" ஆனால் உண்மையில் உருவம் பெரிது எனினும் அழிவை நோக்கி நகரும் உயிரினங்கள் பட்டியலில் யானைகளும் உண்டு என்பது மறுக்கமுடியாத உண்மை.

தந்தத்திற்காக கொல்லப்படும் யானைகளின் அளவிற்கு நிகராக வயல்வெளியில் மின்சாரம் தாக்கி இறக்கும் யானைகளின் அளவு இருப்பதாக ஒரு ஆய்வு கூறுகிறது. நில ஆக்கிரமிப்பு என்ற பெயரில் யானைகளின் வழித்தடத்தை ஆக்கிரமித்து அவை வாழ்ந்த இடத்தில் நாம் வீடுகட்டி குடியேறிவிட்டு தற்போது அந்த உயிரினங்களை பார்க்கும் இடத்தில் எல்லாம் ஓட ஓட விரட்டுகிறோம்.

நம்மில் பலர் யானைகள் மீதேறி சவாரி செய்திருப்போம். ஆனால் ஒரு அதிர்ச்சியான தகவல் என்னவென்றால் இயற்கையில் யானைகளின் முதுகெலும்பு பாரம் தாங்கும் அளவிற்கு உறுதியானது அல்ல. இப்படி அதிக சுமைகளை முதுகில் சுமப்பதால் நாளடைவில் அதன் முதுகெலும்பு பல வீனமாவதாகவும் அறிஞர்கள் கூறுகின்றனர்.

இப்படி பாரம் தாங்காத முதுகை கொண்ட யானைகளின் மிக பெரிய பலமே 40,000க்கும் மேல் தசை அடுக்கை கொண்ட அதன் நீண்ட துதிக்கை தான். ஒரு வளர்ந்த யானையால் சுமார் 770டன் வரை தனது துதிக்கையால் தூக்கமுடியும். பல கிலோமீட்டருக்கு அப்பால் உள்ள நீர் ஆதாரத்தை கூட வெகு சுலபத்தில் யானைகள் தங்களது துதிக்கையால் கண்டறியும்.

இந்த அதிசய இனத்தால் சுமார் 6 மணி நேரம் 48 கிலோமீட்டர் தொடர்ச்சியாக நீந்த முடியும். சிலர் கடலில் பல கிலோமீட்டர் நீந்தி வந்த யானைகளை கண்டுள்ளதாகவும் கூறு கின்றனர்.

படர்ந்த உடம்பு சிறு கல்லை போன்ற கண்கள், அதீத அறிவு உள்ள இந்த யானைகளை அழிவிலிருந்து காப்பற்ற வேண்டியது மனிதர்களாகிய நம்முடைய கடமை.

# பிடல் காஸ்ரோ



அமெரிக்கா தனது ஏகாதிபத்திய கொள்கையின் மூலம் கியூபாவிலும் தனது கொடியை நாட்டியிருந்தது. ஆனால் அமெரிக்காவால் அங்கு நெடுங்காலம் நிலைத்து நிற்கமுடியவில்லை. அமெரிக்காவின் பல பெரு முதலாளிகள் கியூபாவில் கால்பதித்து கியூபா நாட்டு அரசின் துணையுடன் அங்கு தொழில் செய்து கியூபா நாட்டு மக்களையும் அதன் செல்வத்தையும் சுரண்டிக் கொண்டிருந்தனர்.

இதனைக் கண்டு கொதித்தெழுந்த பிடல் காஸ்ட்ரோ கியூபாவின் அரசிற்கு எதிராக போராட்டத்தில் குதித்தார். அவர் தனது போராட்டத்தை முன்னெடுத்து செல்ல தேர்ந்தெடுத்த கொள்கைதான் கம்யூனிசம். பிடல் காஸ்ட்ரோ கல்லூரியில் படிக்கும்பொழுதே கம்யூனிச கட்சியில் இணைந்து பல போராட்டங்களில் ஈடுபட்டு சிறை சென்றார்.

அவரது தொடர் போராட்டத்தின் விளைவாக 1959ம் ஆண்டு புல்ஜென்சியோ பாட்டிஸ்டாவின் ஆட்சியை வீழ்த்தி தலைமை அமைச்சராக பொறுப்பேற்றார். 1959 முதல் 1976 வரை கியூபாவின் பிரதமராகவும். 1976 முதல் 2008-ம் ஆண்டு வரை கியூபாவின் ஜனாதிபதியாகவும் பொறுப்பு வகித்தார்.

இவர் ஆட்சி பொறுப்பேற்ற பிறகு அமெரிக்காவிற்கும் கியூபாவிற்கும் நேரடி மோதல்கள் வெடித்தது. முதலில் காஸ்ட்ரோவை அமெரிக்கா தனது பக்கம் இழுக்க நினைத்து திட்டங்களை தீட்டியது. ஆனால் அதனுடைய திட்டங்கள் அனைத்தும் தோல்வியில் முடிந்தன. கியூபாவின் வளங்கள் அனைத்தும் கியூபா மக்களுக்கே சொந்தம் என காஸ்ட்ரோ அறிவித்தார். மேலும் கியூபாவில் உள்ள தொழிற்சாலைகள் அனைத்தையும் பொதுவுடைமையாக அறிவித்தார். காஸ்ட்ரோ. அதனால் கடும் கோபம் கொண்ட அமெரிக்கா கியூபாவின் மீது பொருளாதார தடை விதித்தது.

கியூபாவில் தயாரிக்கப்பட்ட பொருட்கள் அனைத்தும் கியூபாவிலேயே தேங்கும் நிலை ஏற்பட்டது. அப்பொழுது பிடல் காஸ்ட்ரோவுக்கு கை கொடுத்தது. ரஷியா. கியூபாவின் பொருட்களை ரஷியா இறக்குமதி செய்ய ஒப்புக்கொண்டது. மேலும் கியூபா மக்களும் தங்கள் நாட்டிற்காக கடுமையாக உழைத்தனர்.

இதனால், அமெரிக்க நிறுவனங்கள் வெகுவாக பாதிக்கப்பட்டன. எனவே காஸ்ட்ரோவை கொலை செய்ய அமெரிக்காவின் சிஐஏ அமைப்பு தீவிரமாக செயல்பட்டது. ஒருமுறை இரண்டு முறை அல்ல மொத்தம் 638 முறை பிடல் காஸ்ட்ரோவை கொலைசெய்ய திட்டமிட்டு அமெரிக்கா தோல்வியை தழுவியது.

பிடல் காஸ்ட்ரோவுக்கு விஷம் கொடுப்பது. ரசாயனம் தெளிப்பது. குண்டு போடுவது. துப்பாக்கியால் சுட்டுக் கொல்வது. சுருட்டில் விஷம் தடவுவது. விபத்து ஏற்படுத்துவது. விஷ மாத்திரை கொடுப்பது என பல முயற்சிகளை மேற்கொண்டது. பிடல் காஸ்ட்ரோவை கியூபாவில் உள்ள மாஃபியா கும்பலை வைத்து கொல்ல அமெரிக்கா முடிவு செய்தது. ஆனால் அந்த முயற்சியும் தோல்வியில் முடிந்தது.

இந்நிலையில். கியூபாவுடன் நட்பு பாராட்டுவது என்று பராக் ஒபாமா முடிவு செய்து அதற்கான முயற்சிகளையும் செய்தார். 54 ஆண்டுகள் கழித்து அமெரிக்காவில் கியூபா நாட்டு தூதரகம் திறக்கப்பட்டது. அதேபோன்று கியூபாவில் அமெரிக்க தூதரகம் திறக்கப்பட்டது. இதை தொடர்ந்து அமெரிக்க அதிபர் ஒபாமா கியூபாவுக்கு சென்றார்.

கியூபாவின் முன்னாள் அதிபர் பிடல் காஸ்ட்ரோவின் தம்பியான தற்போதைய அதிபர் ரவுல் காஸ்ட்ரோவை. ஒபாமா சந்தித்தார். இந்த சந்திப்பின்போது இருநாட்டு நல்லுறவு உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.


உடல்நலம் குன்றிய நிலையில் சக்கர நாற்காலியின் துணையின்றி நடமாட முடியாத நிலையில் இருந்த கியூபா கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவரும். முன்னாள் அதிபருமான பிடல் காஸ்ட்ரோ. ஒபாமாவை சந்தித்துப் பேச மறுத்து விட்டார்.

அமெரிக்காவிற்கு சிம்மசொப்பனமாக விளங்கிய பிடல் காஸ்ட்ரோ தனது 90வது வயதில் காலமானார்.




## மூலப்பொருளாகும் காற்று மாசு!

காற்றில் கலக்கும் மாசுக்களை பயனுள்ள பொருட்களாக உருமாற்றும் ஆராய்ச்சிகள் தொடர்கின்றன. குறிப்பாக, கார்பன் டை ஆக்சைடினை பயனுள்ள வேதிப்பொருட்களாக மாற்றும் தொழில்நுட்பம் ஒன்றை முன்வைக்கிறது அமெரிக்காவை சேர்ந்த 'டுவெல்வ்' என்ற புத்திளம் நிறுவனம். சூரிய ஒளியிலிருந்து மின்சாரத்தை எடுத்து, அந்த ஆற்றலை வைத்து காற்று மாசுக்களிலிருந்து கார்பனை பிரித்தெடுக்கிறது டுவெல்வின் தொழில்நுட்பம். பின் அந்த கார்பனை மூலப் பொருளாக வைத்து பல வகை நடைமுறைப் பொருட்களை செய்ய முடியும்.




உதாரணமாக, ஜெட் விமானங்களுக்கான எரிபொருள், கண் கண்ணாடிக்குத் தேவையான லென்ஸ் போன்றவற்றை தயாரிக்கலாம் என்கிறார் டுவெல்வின் இணை நிறுவனர் நிகோலாஸ் பிலான்டெர்ஸ். காற்று மாசுக்களிலிருந்து கார்பனை பிரிப்பது, காற்று மாசின் அளவை மெல்ல மெல்லக் குறைக்கும். தவிர, அதிலிருந்தே எரிபொருளை தயாரிப்பது, பெட்ரோலிய பொருட்களின் தேவையையும் குறைக்கும். கடந்த ஆண்டு முதல், இதே தொழில்நுட்பத்தை பயன்படுத்தி மெர்சிடிஸ் பென்சுக்கு சில வாகன உதிரி பாகங்களை, டுவெல்வ் தயாரித்து தருகிறது. மேலும், 'புரோக்டர் அண்டு கேம்பிளின், டைடு' சோப்புத் தூளில் கலப்பதற்குத் தேவையான சில மூலப்பொருட்களையும் டுவெல்வ் உற்பத்தி செய்து கொடுக்கிறது. அதுமட்டுமல்ல, 'ஷெல், ரெப்சோல், சோகால்கேஸ்' போன்ற நிறுவனங்களுக்கும், காற்று மாசு கார்பனை எடுத்து பயனுள்ள பொருட்களை தயாரித்து தரும் ஆராய்ச்சியை டுவெல்வின் விஞ்ஞானிகள் தொடர்கின்றனர். காற்றில் கலக்கும் மாசுக்களை பயனுள்ள பொருட்களாக உருமாற்றும் ஆராய்ச்சிகள் தொடர்கின்றன. குறிப்பாக, கார்பன் டை ஆக்சைடினை பயனுள்ள வேதிப்பொருட்களாக மாற்றும் தொழில்நுட்பம் ஒன்றை முன்வைக்கிறது அமெரிக்காவை சேர்ந்த 'டுவெல்வ்' என்ற புத்திளம் நிறுவனம்.

சூரிய ஒளியிலிருந்து மின்சாரத்தை எடுத்து, அந்த ஆற்றலை வைத்து காற்று மாசுக்களிலிருந்து கார்பனை பிரித்தெடுக்கிறது டுவெல்வின் தொழில்நுட்பம். பின் அந்த கார்பனை மூலப் பொருளாக வைத்து பல வகை நடைமுறைப் பொருட்களை செய்ய முடியும்.உதாரணமாக, ஜெட் விமானங்களுக்கான எரிபொருள், கண் கண்ணாடிக்குத் தேவையான லென்ஸ் போன்றவற்றை தயாரிக்கலாம் என்கிறார் டுவெல்வின் இணை நிறுவனர் நிகோலாஸ் பிலான்டெர்ஸ். காற்று மாசுக்களிலிருந்து கார்பனை பிரிப்பது, காற்று மாசின் அளவை மெல்ல மெல்லக் குறைக்கும். தவிர, அதிலிருந்தே எரிபொருளை தயாரிப்பது, பெட்ரோலிய பொருட்களின் தேவையையும் குறைக்கும். கடந்த ஆண்டு முதல், இதே தொழில்நுட்பத்தை பயன்படுத்தி மெர்சிடிஸ் பென்சுக்கு சில வாகன உதிரி பாகங்களை, டுவெல்வ் தயாரித்து தருகிறது. மேலும், 'புரோக்டர் அண்டு கேம்பிளின், டைடு' சோப்புத் தூளில் கலப்பதற்குத் தேவையான சில மூலப்பொருட்களையும் டுவெல்வ் உற்பத்தி செய்து கொடுக்கிறது. அதுமட்டுமல்ல, 'ஷெல், ரெப்சோல், சோகால்கேஸ்' போன்ற நிறுவனங்களுக்கும், காற்று மாசு கார்பனை எடுத்து பயனுள்ள பொருட்களை தயாரித்து தரும் ஆராய்ச்சியை டுவெல்வின் விஞ்ஞானிகள் தொடர்கின்றனர்.

## ஓடத் தெரிந்த ரோபோ!


இரண்டு கால் ரோபோவான 'கேசி', மிகவும் வித்தியாசமானது. தடுமாறி விழாமல் வேகமாக நடக்கும் திறன் கொண்ட கேசி, அண்மையில் வேகமாக ஓடிக் காட்டியும் அசத்தியுள்ளது. அமெரிக்காவிலுள்ள ஓரிகன் மாநில பல்கலையின் வளாகத்திற்குள், 53 நிமிடங்களில் ஐந்து கி.மீ., தொலைவு வரை ஓடிக் காட்டியது கேசி ரோபோ. ஓரிகன் ஆராய்ச்சியாளர்கள், நெருப்புக் கோழியின் கால்களை முன்மாதிரியாகக் கொண்டு கேசியை உருவாக்கினர். கேசி ரோபோவிற்கு, நடந்தபடியே வேகத்தை அதிகரித்து ஓடவும், பின், வேகத்தை குறைத்து நடைக்கு மாறவும் தெரியும். கடந்த சில ஆண்டுகளாக நடக்கவும், படிகளில் ஏறவும் பயிற்சி பெற்றுவந்த கேசியிற்கு, ஓடும் திறனைத் தருவதற்காக, இயந்திர கற்றல் மென்பொருளில் சிறப்பு நிரல்களை ஆராய்ச்சியாளர்கள் எழுதினர்.



இந்த நிரல்கள் மூலமும், 'ரிமோட் கன்ட்ரோல்' கருவி மூலம் கட்டுப்படுத்தியும் கேசி ரோபோ , சமதள சாலைகளில் ஓடிக் காட்டியது. வருங்காலத்தில், டெலிவரி சேவைகளில் ஈடுபடுத்த கேசி ரோபோக்கள் உதவும் என, இதன் படைப்பாளர்கள் நம்புகின்றனர். கேசியிற்கு இடுப்பு, கால்கள், சிறிய பாதங்கள் மட்டுமே உண்டு. இடுப்புப் பகுதியில் ஒரு பெட்டியை பொருத்தினால், அதில் சில தூதஞ்சல்கள், சரக்குகளை வைத்து அனுப்ப முடியும். இந்த ரோபோக்கள் சரக்கு வேனிலிருந்து இறங்கி, வீட்டு வாசலுக்கு போய் சரக்கை உரிமையாளரிடம் தந்துவிட்டு திரும்பி வேனுக்கே வந்துவிடும்.

## இணையத் தகவல் வேகத்தின் சாதனை!

இணையத்தின் செயல்பாட்டுக்கு அடிப்படை அளவுகோலாக இருப்பது, ஒரு விநாடிக்கு எத்தனை தகவல்கள் அனுப்ப முடியும் என்பது தான். அண்மையில், 3000 கி.மீ நீளமுள்ள ஒளி இழைக் கம்பிகள் மூலம் ஒரு விநாடிக்கு 319 டெராபிட் தகவல்களை அனுப்பி உலக சாதனை படைத்திருக்கின்றனர், ஜப்பானைச் சேர்ந்த என்.ஐ.ஐ.சி.டி.யின் விஞ்ஞானிகள்.



இங்கும் அங்குமாக இருக்கும் பல கோடி கணினிகளை இணைப்பவை ஒளி இழைக் கம்பிகள். கடலுக்கு அடியே போடப்படும் இவற்றின் வழியே தான், இணையத்தின் அனைத்துத் தகவல்களும் பரிமாறப்படுகின்றன.

ஒரு நாட்டின் இணையத் தகவல் பரிமாற்ற வேகத்திற்கும், அந்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் தொடர்பு இருப்பதாக வல்லுநர்கள் கணித்துள்ளனர். எனவே தான், இணைய தகவல் பரிமாற்ற வேகத்திற்கான பந்தயம் தொடங்கியிருக்கிறது.

தற்போது அமெரிக்கா மற்றும் ஜப்பானில், வீடுகளுக்கான இணைய இணைப்பின் வேகம் ஒரு நொடிக்கு 10 ஜி.பி. என்கிற அளவில் தான் உள்ளது. இதை வைத்துப் பார்க்கையில், 319 டெராபிட் என்பது பல நூறு மடங்கு வேகம் என அறியலாம். ஜப்பானியர்கள், இணையத் தகவல்களை ஒளிவடிவமாக மாற்றி அனுப்புவது முதல், மறுமுனையில் அவற்றைப் பெறுவது வரை பல நுட்பமான முன்னேற்றங்களை இதில் செயல்படுத்தியுள்ளனர். மேலும், ஏற்கனவே உள்ள ஒளி இழைகளின் வலைப்பின்னலையே இவை பயன்படுத்துவது குறிப்பிடத்தக்கது.

## பறந்து வரும் சரக்கு!



உலகின் மிகப் பெரிய இணைய அங்காடியான அமேசான், சரக்கு போக்கு வரத்திலும் முன்னோடியாக உள்ளது. தனது வாடிக்கையாளர்களின் முகவரிக்கு பொருட்களைக் கொண்டு போய் தருவதற்கு, தனது வாகனங்களையே எதிர்காலத்தில் பயன்படுத்த நினைக்கிறது அமேசான்.

இதற்கென தற்போது மின்சார டெலிவரி வேன்களை பயன்படுத்த தொடங்கியுள்ளது. விரைவில், அந்த வேன்களிலிருந்து, வீட்டு வாசலில் பொருட்களை கொண்டு போய் போடுவதற்கு ட்ரோன்களை பயன்படுத்த அமேசான் திட்டமிட்டுள்ளது.

கதவருகே டெலிவரி செய்ய, வேனில் தனியாக ஒரு பணியாளர் அமர்ந்து செல்ல வேண்டியதில்லை. வேனின் கூரை மேல் இருக்கும் ட்ரோன், மதில் சுவர், கேட், படிகள் என்று எவற்றையும் பறந்து கடந்து சென்று சரக்கை வைத்துவிட்டு வேனுக்குத் திரும்ப முடியும். அடுக்கு மாடிக் கட்டிடங்களுக்கும் ட்ரோன்களே பொருத்தமானவை என அமேசான் ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

பிரம்மாண்டமான சரக்கு கிடங்கில், சக்கரத்துடன் கூடிய ரோபோக்கள் பொருட்களை எடுத்து தானோட்டி மின் வாகனங்களில் போட்டு அனுப்ப, அவை முகவரிக்கு அருகே வந்ததும், வேனிலிருக்கும் ட்ரோன்கள் பொருளை எடுத்துப் பறந்து போய், வாசலருகே போட்டுவிட்டுத் திரும்பும். இது தான் அமேசான் உருவாக்கவிருக்கும் எதிர்காலம்.

**ஒரு விஞ்ஞானி என்பவர் சரியான பதிலைத் தருபவர் அல்ல. சரியான கேள்வியைக் கேட்பவரே விஞ்ஞானி.**

**கிளாட் லீவை ஸ்ட்ராஸ்,**
**பிரெஞ்சு மானுடவியலாளர்**



# விளையாட்டு செய்திகள்

## டோக்கியோ ஒலிம்பிக் இனிதே நிறைவு!

நீண்ட தடை, கொரோனா அச்சுறுத்தல் மற்றும் பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் நடைபெற்ற டோக்கியோ ஒலிம்பிக், இனிதே நிறைவுப் பெற்றுள்ளது. கடந்த ஆண்டு நடைபெறவிருந்த கோடைகால ஒலிம்பிக், கொரோனா அச்சுறுத்தல் காரணமாக இந்த ஆண்டு ஒத்தி வைக்கப்பட்டது. இதன்படி கடந்த ஜூலை 23ஆம் திகதி முதல் அன்று வரை ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்றது.

206 நாடுகள் பங்கேற்ற இத்தொடரில், 33 விளையாட்டுகளில் 339 பிரிவுகளில் போட்டிகள் நடைபெற்றன. பரபரப்பான இறுதிநேரத்தில் ஒரு தங்க பதக்கம் முன்னிலையில், பதக்க பட்டியலில் முதலிடத்துடன் அமெரிக்கா தொடரை நிறைவுசெய்துள்ளது.

அமெரிக்கா 39 தங்கம், 41 வெள்ளி, 33 வெண்கலம் என மொத்தமாக 113 பதக்கங்களுடன் பதக்க பட்டியலில் முதலிடத்தை பிடித்தது. 38 தங்கம், 32 வெள்ளி, 18 வெண்கலம் என மொத்தமாக 88 பதக்கங்களுடன் சீனா இரண்டாவது இடத்தை பிடித்தது.

27 தங்கம் 14 வெள்ளி, 17 வெண்கலம் என என மொத்தமாக 58 பதக்கங்களுடன் ஜப்பான் மூன்றாவது இடத்தை பிடித்தது. பிரித்தானியா 22 தங்கம், 21 வெள்ளி, 22 வெண்கலம் என மொத்தமாக 65 பதக்கங்களுடன் நான்காவது இடத்தை பிடித்தது.

ரஷ்யா 20 தங்கம், 28 வெள்ளி, 23 வெண்கலம் என மொத்தமாக 71 பதக்கங்களுடன் ஐந்தாவது இடத்தை பிடித்தது. அவுஸ்ரேலியா, நெதர்லாந்து, பிரான்ஸ், ஜேர்மனி மற்றும் இத்தாலி ஆகிய நாடுகள் முறையே ஆறு முதல் பத்து இடங்களை பிடித்தது. உலகின் மிகப்பெரிய விளையாட்டு தொடரான ஒலிம்பிக், அடுத்ததாக எதிர்வரும் 2024ஆம் ஆண்டு பிரான்ஸ் தலைநகர் பரிஸில் நடைபெறவுள்ளது.



## ஸ்டைரியா கிராண்ட் பிரிக்ஸ்: ஜோர்ஜ் மார்ட்டின் முதலிடம்!

மோட்டோ ஜிபி தொடரின் ஸ்டைரியா கிராண்ட் பிரிக்ஸ் பந்தயத்தில், டுகார்டி அணியின் ஜோர்ஜ் மார்ட்டின் முதலிடம் பிடித்துள்ளார். இளசுகளின் விருப்ப விளையாட்டாக இரசிக்கப்படும் மோட்டோ ஜிபி பந்தயம், ஆண்டுக்கு 19 சுற்றுகளாக பல்வேறு நாடுகளில் நடைபெறும். அந்த வகையில் ஆண்டின் பத்தாவது சுற்றான ஸ்டைரியா கிராண்ட் பிரிக்ஸ் பந்தயம், நேற்று ரெட் புல் சர்வதேச ஓடுதளத்தில் நடைபெற்றது.

இதில் பந்தய தூரத்தை நோக்கி, 21 வீரர்கள் மோட்டார் சைக்கிள்களில் சீறிபாய்ந்தனர். இதில், டுகார்டி அணியின் ஜோர்ஜ் மார்ட்டின், பந்தய தூரத்தை 38 நிமிடங்கள், 07.879 வினாடிகளில் கடந்து முதலிடத்தை பிடித்தார். அத்தோடு முதலிடத்திற்கான 25 புள்ளிகளையும் அவர் பெற்றுக் கொண்டார்.

இதையடுத்து, சூசுக்கி அணியின் ஜோன் மிர், 1.548 வினாடிகள் பின்னிலையில் பந்தய தூரத்தை கடந்து இரண்டாவது இடத்தை பிடித்ததோடு, அதற்கான 20 புள்ளிகளையும் பெற்றுக்கொண்டார். இவரையடுத்து, யமஹா அணியின் ஃபேபியோ குவார்டாரோ, 9.632 வினாடிகள் பின்னிலையில் பந்தய தூரத்தை கடந்து மூன்றாவது இடத்தை பிடித்தார். அத்துடன் இதற்கான 16 புள்ளிகளையும் அவர் பெற்றுக்கொண்டார்.

இதுவரை நடந்து முடிந்துள்ள பத்து சுற்றுப் போட்டிகளின் அடிப்படையில், யமஹா அணியின் ஃபேபியோ குவார்டாரோ நான்கு வெற்றிகளுடன் 172 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார். டுகார்டி அணியின் ஜோஹன் சார்கோ, 132 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திலும் சூசுக்கி அணியின் ஜோன் மிர், 121 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளனர். பதினொராவது சுற்றான ஒஸ்திரியன் ஜிபி, எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 15ஆம் திகதி ரெட் புல் சர்வதேச ஓடுதளத்தில் நடைபெறவுள்ளது.



## 2028ஆம் ஆண்டு ஒலிம்பிக்கில் கிரிக்கெட் விளையாட்டை சேர்த்துகொள்ள ஐ.சி.சி. முயற்சி!

ஒலிம்பிக்கில் கிரிக்கெட் விளையாட்டைச் சேர்த்துக்கொள்வதற்கான முயற்சிகளை சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) மேற்கொண்டுள்ளது. இதன்படி 2028ஆம் ஆண்டு அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸில் நடைபெறவுள்ள ஒலிம்பிக்கில் கிரிக்கெட் விளையாட்டை சேர்த்துகொள்ள முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக சர்வதேச கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இதுகுறித்து சர்வதேச கிரிக்கெட் சபையின் தலைவர் கிரேக் பார்கிலே கூறுகையில், 'அமெரிக்காவில் 30 மில்லியன் கிரிக்கெட் இரசிகர்கள் உள்ளார்கள். இதனால் ஒலிம்பிக்கில் கிரிக்கெட் பங்கேற்பது பொருத்தமாக இருக்கும். ஆனால் இது அவ்வளவு எளிதல்ல. ஒலிம்பிக்கில் இணைந்துகொள்ள பல அற்புதமான விளையாட்டுகள் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. எனினும் கிரிக்கெட்டைச் சேர்க்க இதுவே சரியான நேரம். ஒலிம்பிக்ஸ/ம் கிரிக்கெட்டும் நல்ல கூட்டணியாக அமையும்' என கூறினார்.

இதற்கு முன்பு 1900ஆம் ஆண்டு பரிஸ் ஒலிம்பிக்கில் மட்டுமே கிரிக்கெட் பங்கேற்றுள்ளது. அதிலும் இங்கிலாந்தும் பிரான்சும் மட்டும் விளையாடின. இதனால் 128 வருடங்களுக்குப் பிறகு ஒலிம்பிக்கில் கிரிக்கெட் விளையாட்டை மீண்டும் சேர்க்க ஐ.சி.சி. முயற்சி மேற்கொண்டு வருகிறது. அடுத்த வருடம் பர்மிங்கமில் நடைபெறவுள்ள 2022ஆம் ஆண்டு பொதுநலவாய விளையாட்டுப் போட்டியில் கிரிக்கெட் இடம்பெற்றுள்ளது. ஜப்பானில் நடைபெற்று வந்த டோக்கியோ ஒலிம்பிக் போட்டி ஞாயிற்றுக்கிழமையுடன் நிறைவடைந்தது. அடுத்த ஒலிம்பிக் 2024ஆம் ஆண்டு பிரான்ஸ் தலைநகர் பரிஸில் நடைபெறவுள்ளமை குறிப்பிடதக்கது.




## பாகிஸ்தான் அணிக்கெதிரான முதல் டெஸ்ட்

மேற்கிந்திய தீவுகள் மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியின் இரண்டாம்நாள் ஆட்டம், நிறைவுக்கு வந்துள்ளது. இதன்படி முதல் இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிவரும் மேற்கிந்திய தீவுகள் அணி, நேற்றைய ஆட்டநேர முடிவில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 251 ஓட்டங்களை பெற்றுள்ளது. ஆட்டநேர முடிவில் ஜோசுவா டி சில்வா 20 ஓட்டங்களுடனும் ஜோமேல் வொரிக்கான் 1 ஓட்டத்துடனும் ஆட்டமிழக்காது களத்தில் இருந்தனர்.

முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணியின் முதல் இன்னிங்ஸ் ஓட்டங்களுடன் ஒப்பிடுகையில், மேற்கிந்திய தீவுகள் அணி, 34 ஓட்டங்கள் முன்னிலையில் உள்ளது.ஜமைக்காவில் அன்று (வியாழக்கிழமை) ஆரம்பமான இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்திய தீவுகள் அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி, 217 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதன்போது பாகிஸ்தான் அணி சார்பில் அதிகப்பட்ச ஓட்டங்களாக, அலாம் 56 ஓட்டங்களையும் பஷீம் அஷ்ரப் 44 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். மேற்கிந்திய தீவுகள் அணியின் பந்துவீச்சில், ஜெய்டன் சீல்ஸ் மற்றும் ஹோல்டர் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும் ரோச் 2 விக்கெட்டுகளையும் மேயர்ஸ் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து பதிலுக்கு முதல் இன்னிங்சை தொடங்கிய மேற்கிந்திய தீவுகள் அணி, நேற்றைய ஆட்டநேர முடிவில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 251 ஓட்டங்களை பெற்றது. கெய்ரன் பவல் மற்றும் போனர் ஆகியோர் ஓட்டமெதுவும் பெறாத நிலையில் ஆட்டமிழந்தனர். கிரைஜ் பிரத்வெயிட் 97 ஓட்டங்களுடனும் ரொஸ்டன் சேஸ் 21 ஓட்டங்களுடனும் ஜெரமைன் பிளக்வுட் 22 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

கெய்ல் மேயர்ஸ் ஓட்டமெதுவும் பெறாத நிலையிலும் ஜேஸன் ஹோல்டர் 58 ஓட்டங்களுடனும் கெமார் ரோச் 13 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். பாகிஸ்தான் அணியின் பந்துவீச்சில், மொஹமட் அப்பாஸ் 3 விக்கெட்டுகளையும், ஷாயின் அப்ரிடி 2 விக்கெட்டுகளையும், பஷீம் அஷ்ரப் மற்றும் ஹசன் அலி ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர். இன்னமும் 2 விக்கெட்டுகள் வசமுள்ள நிலையில், அன்று போட்டியின் மூன்றாவது நாளில், மேற்கிந்திய தீவுகள் அணி துடுப்பெடுத்தாடவுள்ளது.




## ஆப்கானிலிருந்து பிரித்தானியர்கள் வெளியேற உதவுவதற்காக துருப்புக்களை அனுப்பும் பிரித்தானியா!

பிரித்தானிய குடிமக்கள் வெளியேற உதவுவதற்காக, சுமார் 600 பிரித்தானிய துருப்புக்கள் ஆப்கானிஸ்தானுக்கு அனுப்பப்பட உள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

நாட்டின் இரண்டாவது பெரிய நகரான கந்தஹார் மற்றும் கஜினி மற்றும் ஹெராத் நகரங்களை தலிபான்கள் கைப்பற்றிய நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

பிரித்தானிய நாட்டவர்கள், ஆப்கானிஸ்தான் ஊழியர்கள் மற்றும் மொழிபெயர்ப்பாளர்களை இடமாற்றம் செய்ய இராணுவ வீரர்கள் உதவுவதோடு பாதுகாப்பு அளிப்பார்கள்.

கடந்த வாரம் வெளியுறவு அலுவலகம், அனைத்து பிரித்தானிய நாட்டினரையும் வெளியேறுமாறு அறிவுறுத்தியது. சுமார் 4,000 பிரித்தானிய குடிமக்கள் இன்னும் நாட்டில் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இதுகுறித்து பாதுகாப்புச் செயலர் பென் வாலஸ் கூறுகையில், 'பிரித்தானிய நாட்டவர்கள், இராணுவ வீரர்கள் மற்றும் முன்னாள் ஆப்கானிஸ்தான் ஊழியர்களின் பாதுகாப்பே அரசாங்கத்தின் முதல் முன்னுரிமை. அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய எங்களால் முடிந்த அனைத்தையும் செய்ய வேண்டும்' என கூறினார்.

ஆப்கானிஸ்தானுக்கான பிரித்தானிய தூதர் சர் லாரி பிரிஸ்டோ, ஆப்கானிஸ்தானில் உள்ள ஒரு சிறிய குழுவை தொடர்ந்து வழிநடத்துவார். இது காபூலுக்குள் மிகவும் பாதுகாப்பான இடத்திற்கு இடம்பெயரும் என்று பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அத்துடன் பிரித்தானிய நாட்டவர்கள், பிரித்தானியாவின் ஆப்கானிஸ்தான் இடமாற்றங்கள் மற்றும் உதவி கொள்கைக்கு தூதரகம் உதவும், இது ஏற்கனவே 3,100க்கும் மேற்பட்ட (கடந்த சில வாரங்களில் 1,800 உட்பட) முன்னாள் ஆப்கானிஸ்தான் ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்பங்கள் பிரித்தானியாவிற்கு செல்ல உதவியது.

இதனிடையே, சிறப்பு விமானங்களில் கணிசமான தூதரக ஊழியர்களை வெளியேற்ற உதவுவதற்காக காபூலில் உள்ள விமான நிலையத்திற்கு 3,000 இராணுவ துருப்புக்களை அனுப்புவதாகவும் அமெரிக்கா கூறியுள்ளது.



## அமெரிக்காவில் நோயெதிர்ப்பு குறைபாடுள்ள மக்களுக்கு மூன்றாவது அளவு கொவிட் தடுப்பூசி!

அமெரிக்காவில் நோயெதிர்ப்பு குறைபாடுள்ள மக்கள் மூன்றாவது அளவு கொவிட் தடுப்பூசியை பெற அனுமதிக்கப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதற்கமைய, ஃபைஸர் மற்றும் மொடர்னா கொவிட-19 தடுப்பூசிகளுக்கான அவசரகால பயன்பாட்டு அங்கீகாரங்களை திருத்தம் செய்யத் தயாராக உள்ளதாக உணவு மற்றும் மருந்து நிர்வாகம் தெரிவித்துள்ளது.

திட்டங்களை நன்கு அறிந்த இரண்டு ஆதாரங்களின்படி, சமரசம் செய்யப்பட்ட நோயெதிர்ப்பு அமைப்பு உள்ளவர்களுக்கு மூன்றாவது அளவு கிடைக்கும்.

நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையங்களுக்கான ஆலோசகர்கள் குழு ஜூலையில் கூடி, நோயெதிர்ப்பு குறைபாடுள்ள பெரியவர்களுக்கு கூடுதல் அளவுகளில் நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியதை அடுத்து இந்த நடவடிக்கை வருகின்றது.

இதுகுறித்து உணவு மற்றும் மருந்து நிர்வாக ஆணையாளர் ஜேனட் வூட்காக் கூறுகையில், 'இன்றைய நடவடிக்கை கொவிட்-19 தொற்றிலிருந்து கூடுதல் பாதுகாப்பு தேவைப்படும் சில நோயெதிர்ப்பு குறைபாடுள்ள நபர்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க மருத்துவர்களை அனுமதிக்கிறது.

நாங்கள் முன்பு கூறியது போல, முழுமையாக தடுப்பூசி போடப்பட்ட மற்ற நபர்கள் போதுமான அளவு பாதுகாக்கப்படுகிறார்கள் மற்றும் கொவிட்-19 தடுப்பூசியின் கூடுதல் அளவு தேவையில்லை' என கூறினார்.

நாடு கொவிட்-19 தொற்றுநோயின் மற்றொரு அலைக்குள் நுழைந்துள்ளது. மேலும் குறிப்பாக நோயெதிர்ப்பு குறைபாடுள்ள மக்கள் கடுமையான நோய்க்கான ஆபத்தில் இருப்பதை அறிய முடிகின்றது.

ஜோன்ஸ்ஹோப்கின்ஸ்யுனிவர்சிட்டிஸ்கூல்ஒஃப்மெடிசின், மேமாதம்மேற்கொண்ட ஆய்வில், 'கொவிட்-19 தடுப்பூசியின் முதல் அளவுக்குப் பிறகு 17 சதவீதம் மாற்றுத்திறனாளிகளுக்கு மட்டுமே நோயெதிர்ப்புகள் இருந்தன. மேலும் இரண்டு அளவுகளுக்குப் பிறகு கூடுதலாக 35 சதவீதம் காண்பித்தது'

## மத்திய சீனாவை புரட்டி போடும் வெள்ளம்: இதுவரை 21பேர் உயிரிழப்பு

மத்திய சீனாவின் ஹூபெய் மாகாணத்தில் பெய்த கனமழையால் குறைந்தது 21பேர் உயிரிழந்துள்ளதாக, சீனாவின் அவசர மேலாண்மை அமைச்சகம் தெரிவித்துள்ளது. சமீபத்திய மாதங்களில் வரலாறு காணாத மழையால் சீனா பாதிக்கப்பட்டுள்ளது. இந்தநிலையில், ஹூபெய்யில் கனமழையால் மின்வெட்டு மற்றும் நிலச்சரிவுகள் ஏற்பட்டுள்ளன. நூற்றுக்கணக்கான வீடுகள் அழிக்கப்பட்டன மற்றும் கிட்டத்தட்ட 6,000 மக்களை வெளியேற்ற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. மேலும், நான்கு பேர் காணாமல் போயுள்ளனர்.

நீர்த்தேக்கங்கள் ஆபத்தான அளவை எட்டியுள்ளதாக மாகாணத்தின் அவசர மேலாண்மை பணியகம் தெரிவித்துள்ளது. ஹூபெய் மாகாணத்தில் கடந்த இரு தினங்களாக 503 மி.மீ. மழை பெய்திருப்பதாக தெரியவந்துள்ளது. இதனால் அந்த மாகாணத்தில் உள்ள முக்கிய நகரங்களில் சுமார் 4 மீட்டர் உயரத்துக்கு தண்ணீர் தேங்கி உள்ளது. (அன்று)வியாழக்கிழமை 480 மில்லிமீட்டர் (சுமார் 19 அங்குலம்) மழை பதிவாகியிருக்கும் யிச்செங்கில் கிட்டத்தட்ட இடுப்பு நிலைக்கு உயர்ந்துள்ள தண்ணீரில், குடும்பங்கள் அலைவதையும் மற்றும் பிளாஸ்டிக் பைகளில் அத்தியாவசிய பொருட்களை எடுத்துச் செல்வதையும் சமூகஊடாக புகைப்படங்கள் காட்டின.

'20 அல்லது 30 ஆண்டுகளில் இவ்வளவு மழையை நாங்கள் பார்த்ததில்லை' என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். நூற்றுக்கணக்கான தீயணைப்பு வீரர்கள், ஆயிரக்கணக்கான பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் மிக மோசமாக பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக சீனாவின் அவசர மேலாண்மை அமைச்சகம் தெரிவித்துள்ளது. கடந்த வார இறுதியில் தென்மேற்கு மாகாணமான சிச்சுவானில் பெய்த கனமழையால் சுமார் 100,000 மக்கள் வெளியேற்றப்பட்டனர். ஷாங்காய் உள்ளிட்ட யாங்சே ஆற்றின் கரையோரப் பகுதிகள் வெள்ளத்தால் பாதிக்கப்படும் நிலையில், அடுத்த வாரம் வரை கனமழை நீடிக்கும் என்று சீன வானிலை நிர்வாகம் எச்சரித்துள்ளது.



## இங்கிலாந்தின் பிளைமவுத்தில் துப்பாக்கி சூடு: சந்தேகநபர் உட்பட ஆறு பேர் உயிரிழப்பு!

இங்கிலாந்தின் பிளைமவுத்தில் நடத்தப்பட்ட துப்பாக்கி சூட்டில், சந்தேகநபர் உட்பட ஆறு பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர். அன்று (வியாழக்கிழமை) பிளைமவுத் கீஹாம் பகுதியில் உள்ள பிடிக் டிரைவில் இந்த துப்பாக்கி சூடு சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதன்போது மூன்று பெண்கள், இரண்டு ஆண்கள் மற்றும் சந்தேக நபர் இறந்துவிட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். அனைவரும் துப்பாக்கிச் சூட்டால் இறந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது மற்றும் உறவினர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர்களில் ஒருவர் 10 வயதுக்குட்பட்டவர் என்றும் மேலும் பலர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். இரண்டு பெண்களும் மூன்று ஆண்களும் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டதாகவும், ஒரு பெண் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட சிறிது நேரத்திலேயே இறந்துவிட்டதாகவும் டெவன் மற்றும் கார்ன்வால் பொலிஸ் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

மேலும், 'இந்த பகுதி முற்றுகையிடப்பட்டுள்ளது மற்றும் இந்த சம்பவம் தொடர்பாக பொலிஸார் வேறு யாரையும் தேடவில்லை' என அதிகாரிகள் கூறினர். சமூக ஊடகங்களில் அல்லது வேறு எங்கும் தாக்குதல் சம்பவத்தின் படங்களை ஊகிக்கவோ அல்லது பகிரவோ வேண்டாம் என்று அதிகாரிகள் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்தனர். 2015ஆம் ஆண்டு முதல் நகரத்தை நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்தி வரும் ஜோனி மெர்சர், இந்த தாக்குதல் சம்பவம் தீவிரமான மற்றும் சோகமான சம்பவம் என்று விபரித்தார். நாடாளுமன்றத்தின் மற்றொரு உறுப்பினரான லூக் பொல்லார்ட், இந்த சம்பவம் எங்கள் நகரம் மற்றும் சமூகத்திற்கு மிகவும் மோசமான நாளை குறிக்கிறது என கூறினார்.



# சைனோபார்ம் தடுப்பூசி

**சைனோபார்ம் தடுப்பூசி எவ்வாறு தொழிற்படுகின்றது?**

வைரஸை செயலிழக்கச் செய்து உருவாக்கப்பட்ட தடுப்பூசியாகும்.

அண்ணளவாக 79% செயற்திறன் கொண்டது.

எங்களிற்கு நோயை ஏற்படுத்த முன்பு வைரஸை இந்த தடுப்பூசி அழிக்கிறது.

தடுப்பூசி செலுத்திய பின், வைரஸ் எமது உடலில் நுழையும் போது அதை அடையாளங்காணவும் மற்றும் அதற்கெதிராக தொழிற்படவும் எமது நோயெதிர்ப்பு கட்டமைப்பின் திறனை மேம்படுத்தும்.

**தடுப்பூசி வழங்கும் அளவுகள்**

இரண்டு டோஸ்கள் வழங்கப்படுகின்றது.

இரண்டு டோஸ்களுக்கிடையிலான கால இடைவெளி : 4 வாரங்கள்

**தடுப்பூசி பற்றிய வேறு தகவல்கள்**

தடுப்பூசியை உருவாக்கிய நாடு – சீனா

தடுப்பூசி எவ்வாறு வழங்கப்படுகின்றது மேற்கையில், ஊசியினால் தசை வழி மூலமாக

தடுப்பூசியை சேமித்து வைக்க வேண்டிய வெப்பநிலை 2 தொடக்கம் 8 டிகிரி செல்சியஸ்

தடுப்பூசி வழங்க தகுதியான வயதுப் பிரிவு 18 வயதிற்கு மேற்பட்டோர் (தற்போது இலங்கையில் 30 வயதிற்கு மேற்பட்டோர் மற்றும் தேவையானவர்களிற்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படுகிறது)

**கருத்திற் கொள்ள வேண்டிய பிறகாரணிகள்**

நீரிழிவு, மிகை குருதி அழுத்தம் மற்றும் வேறு நாட்பட்ட நோய்களால் பாதிக்கபட்டு அந்த நோய்களை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்போர் தடுப்பூசியை பெற்றுக்காள்ளலாம்.

கர்ப்பிணித் தாய்மார்களின் நிலைமைகளை கருத்திற் கொண்டு அவர்களிற்கு தடுப்பூசி வழங்கப்படும்.

நீண்டகால நோயால் பாதிக்கப்பட்டவர்கள் தடுப்பூசி செலுத்த முன்பு விஷேட மருத்துவ நிபுணர்களின் ஆலோசனைகளை பெற்று தடுப்பூசி செலுத்திக் கொள்வது மிக்க நன்று.

நாட்பட்ட நோயால் பாதிக்கப்பட்டு அதை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க தவறியோர் தடுப்பூசி செலுத்த முன்பு விஷேட மருத்துவ நிபுணர்களின ஆலோசனைகளை பெற்று தடுப்பூசி செலுத்திக் கொள்வது மிக்க நன்று





**தகவல் – சுகாதார மேம்பாட்டு பணியகம்**

இப்பத்திரிகை இலக்கம் 154ஐ, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 15.08.2021 அன்று வெளியிடப்பட்டது.